நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் :-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET மூலம்
குறைந்த கட்டணத்தில தொடர்புகொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில் துரித தபால்/பொதிகள் சேவை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-2222670, 2223588
FAX: 2223214
Email-del-smskr@eureka.lk

# வலம்புரி

## The Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 17 சனிக்கிழமை (02.08.2003) தொலைபேசி - 2223378 ஒலி 226

# புலிகளிடம் கையளித்த இடைக்கால சபை வரைபை என்னிடமும் கையளிக்க வேண்டும்



## பிரதமருக்கு ஜனாதிபதி உத்தரவு

(நமது நிருபர்)

**வடக்குக் கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக அரசாங்கம் முன்னாள் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் மூலம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ள யோசனைகளில் எந்தவிதமான மாற்றங்களையும் செய்யாமல் அதனை அப்படியே தமக்கு அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைக் கோரியுள்ளார்.**

ஜோன் வெஸ்பேர்க் மூலம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ள வடக்குக் கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாக சபை தொடர்பான யோசனைகளுக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு அனுப்பி வைத்துள்ள யோசனைகளுக்கும் இடையே பாராதூரமான வேறுபாடுகள் இருப்பதை அடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ள யோசனைகளை அப்படியே தனக்கு அனுப்பி

(10ம் பக்கம் பார்க்க)



## தமிழ்ச்செல்வனை ஏற்றவந்த ஹெலி 6 மணித்தியாலம் தாமதம்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின், திருகோணமலைக்கான விஜயத்தின் போது, சுமார் ஆறு மணித்தியாலங்கள் தடங்கல் ஏற்பட்டது.

நேற்று மட்டக்களப்பில் இருந்து திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டபோதே இத் தடங்கல் ஏற்பட்டது.

நேற்று முற்பகல் 9.30 மணிக்கு தமிழ்ச்செல்வன் மட்டக்களப்பில் இருந்து திருமலைக்குப் புறப்பட ஏற்பாடாகி இருந்தது.

ஆனால் அவர் புறப்படத் தயாராக இருந்போதும் அவரை ஏற்றிக் கொண்டு செல்வதற்காக வருகை தரவேண்டிய அரச வான்படைக்குச்

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் கண்காணிப்புக் குழு நேற்று முக்கிய சந்திப்பு

### யாழ்.அரசியல் துறை அலுவலகத்தில் இடம் பெற்றது

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை மீறல்கள் குறித்து யாழ்.மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்பு குழுவினர்க்கும் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறையினர்க்குமிடையில் நேற்று சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

விடுதலைப் புலிகளின் யாழ் அரசியல்துறை அலுவலகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பின் போது திருநெல்வேலி தபால் கட்டைச் சந்தியில் கடந்த மாதம் 23ம் திகதி மக்களால் அமைக்கப்பட்ட

(10ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த (உ/த) பெறுபேறு அடுத்த வாரம் வெளியாகும்

(கொழும்பு)

## குரங்குப்பாஞ்சான் முகாமை



**மூலம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ள யோசனை களில் எந்தவிதமான மாற்றங்களையும் செய்யாமல் அதனை அப் படியே தமக்கு அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைக் கோரியுள்ளார்.**

ஜோன் வெஸ்போர்க் மூலம் விடு தலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ள வடக்குக் கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாக சபை தொடர்பான யோசனைகளுக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விற்கு அனுப்பி வைத்துள்ள யோசனைகளுக்கும் இடையே பாராதூரமான வேறுபாடுகள் இருப்பதை அடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ள யோசனைகளை அப்படியே தனக்கு அனுப்பி

(10ம் பக்கம் பார்க்க)



## தமிழ்ச்செல்வனை ஏற்றவந்த ஹெலி 6 மணித்தியாலம் தாமதம்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின், திருகோண மலைக்கான விஜயத்தின் போது, சுமார் ஆறு மணித்தியாலங்கள் தடங்கல் ஏற்பட்டது.

நேற்று மட்டக்களப்பில் இருந்து திருகோணமலைக்கு விஜயம் மேற் கொண்டபோதே இத் தடங்கல் ஏற் பட்டது.

நேற்று முற்பகல் 9.30 மணிக்கு தமிழ்ச்செல்வன் மட்டக்களப்பில் இருந்து திருமலைக்குப் புறப்பட ஏற்பாடாகி இருந்தது.

ஆனால் அவர் புறப்படத் தயாராக இருந்போதும் அவரை ஏற்றிக் கொண்டு செல்வதற்காக வருகை தரவேண்டிய அரச வான்படைக்குச்

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் கண்காணிப்புக் குழு நேற்று முக்கிய சந்திப்பு

### யாழ்.அரசியல் துறை அலுவலகத்தில் இடம் பெற்றது

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை மீறல்கள் குறித்து யாழ்.மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்பு குழுவினர்க்கும் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறையினர்க்குமிடையில் நேற்று சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

விடுதலைப் புலிகளின் யாழ் அரசியல்துறை அலுவலகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பின் போது திருநெல்வேலி தபால் கட்டைச் சந்தியில் கடந்த மாதம் 23ம் திகதி மக்களால் அமைக்கப்பட்ட

(10ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த (உ/த) பெறுபேறு அடுத்த வாரம் வெளியாகும்

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைப பெறு பேறுகள் அடுத்த வாரம் வெளியிடப் படுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மஹிந்த விஜயசிறி அறிவித் துள்ளார்.

பரீட்சை வினாத்தாள்கள் திருத் தும் பணிகள் ஏற்கனவே முடிவடை ந்த நிலையில், செய்முறைப் பரீட் சைகள் அனைத்தும் கடந்த 20ந் திகதி நிறைவு பெற்றிருந்தன.

பரீட்சைப் பெறுபேறுகள் அனைத் தும் தற்போது கணனி மயப்படுத்தப் பட்டு வருகின்றன. பரீட்சைப் பெறு பேறுகள் கணனி மயப்படுத்தும் வேலைகள் அடுத்தவாரம் நிறை வடைந்ததும் பரீட்சைப் பெறுபேறு கள் வெளியிடப்படும் என்று பரீட் சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# குரங்குப்பாஞ்சான் முகாமை அகற்ற வேண்டிய அவசியமில்லை

## சு.ப.தமிழ்ச்செல்வன் கருத்து

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்துள்ளார்.

மட்டக்களப்பில் இருந்து நேற்றுப் பிற்பகல் 3.30மணிக்கு இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் மூதூர் சேனை ஊரைச் சென்றடைந்த தமிழ்ச்செல்வன் சர்ச்சைக்குள்ளாகியுள்ள கிண்ணியா குரங்குப்பாஞ்சான் பகுதியில் உள்ள புலிகளின் முகாம் தொடர்பாக அங்குள்ள விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் பேசவுள்ளார்.

கிண்ணியா குரங்குப்பாஞ்சான் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம் புலிகளின் பிரதேசம் ஆக இருப்பதால் அதனை அகற்ற வேண்டிய தேவை எமக்கு இல்லை என்றும் அதனை சென்று பார்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் தமிழ்ச்செல்வன் கருதுவதாகவும் மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது.

நாளை ஞாயிற்றுக்கிழமை வரை திருகோணமலையில் தங்கியிருக்கும் தமிழ்ச்செல்வன் திருகோணமலை மாவட்டப் பொறுப்பாளர்கள், போராளிகள், பொது மக்கள், அரச திணைக்களத் தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகளைச் சந்திப்பதுடன் அங்குள்ள முக்கிய இடங்களையும் பார்வையிடுவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

## உயர் பாதுகாப்பு வலயம் குறித்து எவரும் எந்த முடிவும் எடுக்க முடியாது!

### இராணுவத் தலைமையகம் அறிவிப்பு

(கொழும்பு)

யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா விடுமுறையில் இருக்கும் காலப் பகுதியில் யாழ்.குடா நாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக எந்த முடிவையும் எவரும் எடுக்க முடியாது.

இவ்வாறு இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

படைத்தளபதி சரத் பொன்சேகா மேற்கொள்ள இருக்கும் வெளிநாட்டுப் பயணம் தொடர்பாக வெளிவந்துள்ள ஊடகச் செய்திகள், வதந்திகள் குறித்து இராணுவத் தலைமையகம் விளக்கமளிக்கும் வகையில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா வெளிநாட்டு பயணம் மேற்கொள்ள பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. இவர் வெளிநாட்டில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க பதில் படைத்தளபதியாக யாழ்குடாநாட்டில் பணியாற்றுவார்.

எனினும் இக்காலப்பகுதியில் யாழ்.குடாநாட்டு உயர் பதுகாப்பு வலயம் தொடர்பாக பாரதூரமான முடிவுகள் எதுவும் எடுக்கப்படமாட்டாது என அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

### புலிகளின் திட்ட வரைபுக்குப் பின்னரே

## முஸ்லிம் காங்கிரஸ் தனது திட்டவரைபை முன்வைக்கும்

(கொழும்பு)

வடக்கு கிழக்குக்கான இடைக் கால நிர்வாகசபை தொடர்பாக,விடு தலைப் புலிகள் தமது திட்டவரைபை முன்வைத்த பின்னரே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமது திட்ட வரைபு யோசனைகளை முன்வைகக மென்று, கட்சியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் வடக்கு கிழக்கிற்கான இடைக்கால திட்டவரைபொன்றை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ளது. அத்திட்ட வரைபு குறித்து விடுதலைப் புலிகள் இதுவரை திட்ட வரைபு முன்யோசனைகளை வெளியிடவில்லை.

இந் நிலையில் விடுதலைப் புலிகள் திட்ட வரைபு குறித்த தமது முன் யோசனைகளை வெளியிட்ட பின்னரே முஸ்லிம் மக்கள் தொடர்பான திட்ட வரைபு முன் யோசனைகளை தாம் வெளியிட இருப்பதாக கூறினார். (இ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வியாசனின் உலைக்களம் நூல் வெளியீடு



தேசியக் கொடியை விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஏற்றிவைக்கிறார்.




அகவணக்கம் செலுத்தும் போது...





கவிஞர் புதுவை இரத்தினதுரை (வியாசன்), அரசியல் பிரமுகர் வே.பாலகுமார் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.




## வட-கிழக்குக்கு 150 வைத்தியர் நியமிக்கப்படுவர்

வடக்குக் கிழக்கிலுள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர் பற்றாக்குறை நிலவுவதாக சுகாதார அமைச்சர் பி.தயாரட்ண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வைத்தியர் பற்றாக்குறையை நீக்கும் வகையில், வட-கிழக்கிலுள்ள வைத்தியசாலைகளுக்கு விரைவில் 150 வைத்தியர்களை நியமிக்கவுள்ளதாகக் கூறினார். (இ)

## வாகனச் சாரதியிடம் குற்றப் பணம் அறவீடு

சுன்னாகம் பகுதியில், உரிய சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாமல் ஹயஸ் வானை ஓட்டி சைக்கிளில் சென்ற ஒருவரை காயப்படுத்திய குற்றத்திற்காக வாகனச் சாரதியை ரூபா ஆயிரத்து ஐந்நூறைக் குற்றப் பணமாகச் செலுத்துமாறும் காயம் அடைந்த நபருக்கு 5000 ரூபாவை இழப்பீட்டுத் தொகையாகச் செலுத்துமாறும் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் கடந்த புதன்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கினார்.

மேலும் உரிய அனுமதிப் பத்திரம் இன்றி கவனயீனமாக வாகனம் ஓட்டிய வேறொரு சாரதிக்கும் அன்றைய தினம் ரூபா ஆயிரத்து ஐந்நூறு குற்றப் பணமாக அறவிடப்பட்டது. மேற்படி வழக்குகளை சுன்னாகம் பகுதிப் போக்குவரத்துப் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-252)

## செயலமர்வு

கோப்பாய் கோட்ட பாடசாலைகளில் தரம்1-5வரை கற்பிக்கும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான ஜி.ரி.சற்.ரி.ஐ.பி செயலமர்வுகள் இம்மாதம் 2,9,16,18,19-ம் திகதிகளில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது இச் செயலமர்வில் அனைத்து ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (த-79-3)

## பிஸ்கட் அழிப்பு

காலாவதியான பிஸ்கட் பைக்கற்றுகள் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

கடந்த 3ம் திகதி வண்ணார் பண்ணையில் உள்ள கடையொன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த காலாவதியான 100 கிராம் நிறையுள்ள 38கிறீம் கிறாக்கர்

# பொலிஸ்மா அதிபரின் அறிக்கை உண்மைக்குப் புறம்பானது

## ஈ.பி.டி.பி. அறிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த மார்ச் மாதம் கல்கிசையில் சுட்டுக்கொல்லப்பட்ட ரகுபதி என்பவர் எமது உறுப்பினருமல்ல. ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இராணுவத்தின் உளவாளிகளுமல்லர்.

இவ்வாறு ஈ.பி.டி.பி. நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட ரகுபதியின் இறுதி அஞ்சலி நிகழ்வில், தெகிவளை பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி சுனில் தாப்ரூவுடன், தாப்ரூவின் கொலைக்கு காரணமெனக் கூறப்படும் மதன் வந்திருந்ததாகவும், அஞ்சலி நிகழ்வில் டக்ளஸ் தேவானந்தா மாறுவேடத்தில் கலந்து கொண்டிருந்ததால் மதனால் டக்ளஸ் தேவானந்தாவை அடையாளம் காணமுடியாமல் போயிருந்தது என்றும் பொலிஸ்மா அதிபர், தாப்ரூவின் கொலை தொடர்பான விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த மாதம் 18ம் திகதியன்று கல்கிசையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட ரகுபதி என்பவர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) உறுப்பினராக ஒரு போதும் செயற்பட்டவர் அல்ல.ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் இராணுவத் தரப்பின் உளவாளிகளாகச் செயற்படுபவர்ளும் அல்ல.

தெகிவளை பொலிஸ் நிலையப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரியான சுனில் தாப்ரூவின் கொலை தொடர்பான விசாரணை அறிக்கையில் பொலிஸ்மா அதிபர் ரகுபதியை ஈ.பி.டி.பி. உறுப்பினர் என்ற வகையிலும், இராணுவ உளவாளி என்ற வகையிலும் சித்தரித்திருப்பதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.ஆனால் இத் தகவல்கள் அடிப்படை ஆதாரங்கள் எதுவுமற்றவையாகும். கொலையுண்ட ரகுபதி என்பவர் புளொட் அமைப்பின் உறுப்பினராக இருந்ததுடன், கொல்லப்பட்ட வேளையில் தனது குடும்பக் கடமைகளில் ஈடுபட்டிருந்தவர் என்பதும் தனது பிள்ளையின் முன்பாக கோரமாகக் கொல்லப்பட்டார் என்பதும் மனங்கொள்ள வேண்டியவையாகும்.

மேலும் காரணம் எதுவாக இருந்தாலும் எவரும், எவரையும் கொலை செய்து விடுவதை நாகரிக சமூகம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. கொலையுண்டவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவது என்பது ஒரு மனித நேயச் செயற்பாடாகும். உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு ، அனுதாபம் தெரிவிப்பதும் ஆறுதல் கூறுவதும் சாதாரண மனிதப் பண்பு. இவை ஒருபுறம் இருக்க கொலையுண்ட ரகுபதியின் இறுதிச்சடங்குகளில் கட்சியின் செயலாளர் நாயகம் கே. என். டக்ளஸ் தேவானந்தா மாறுவேடத்தில் சென்றதாகக் கூறப்பட்டிருப்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# நீதித்துறை புனரமைப்புக்கு பாராளுமன்ற குழு அமைப்பு

(கொழும்பு)

நீதித்துறை புனரமைப்பதற்காக பரிந்துரைகளை விடுக்கவென் விசேட பாராளுமன்ற குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இக் குழுவின் செயலாளராக

நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதித்துறை நீதியரசர்கள் நீதிபரிபாலன ஆளணியினர் சட்டத்தரணியினர் பொலிஸார் உட்பட சிறைச்சாலை அதிகாரிகள் தொடர்பாக இக் குழு பரிந்துரைகளை வழங்கவுள்ளதுடன் சிறைச்சாலைகளின் நிலைமைகள் தொடர்பாக




கவிஞர் புதுவை இரத்தினதுரை (வியாசன்), அரசியல் பிரமுகர் வே.பாலகுமார் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.




அரங்கில் வீற்றிருப்போர்...



அவையில் வீற்றிருப்போரில் ஒரு பகுதியினர்...

...கல்வி ஆசிரியர்களுக்கான ஜி.ரி.சற்,ரி.ஜ.பி செயலமர்வுகள் இம்மாதம் 2,9,16,18,19-ம் திகதிக ளில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூ ரியில் நடைபெறவுள்ளது இச் செயலமர்வில் அனைத்து ஆசிரி யர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (த-79-3)

## பிஸ்கட் அழிப்பு

காலாவதியான பிஸ்கட் பைக்கற்று கள் பொதுச் சுகாதார பரிசோதகர்க ளால் கைப்பற்றப்பட்டு அழிக்கப் பட்டுள்ளன.

கடந்த 3ம் திகதி வண்ணார் பண்ணையில் உள்ள கடையொன் றில் விற்பனைக்காக வைக்கப்பட்டி ருந்த காலாவதியான 100 கிராம் நிறையுள்ள 38கிறீம் கிறாக்கர் பைக்கற்றுகளே இவ்வாறு அழிக்கப் பட்டுள்ளன. (த-5)

## பாதுகாவலன் பத்திரிகையாளர் கூட்டம்

பாதுகாவலன் பத்திரிகையாளர் களுக்கான மாதாந்தக் கூட்டம் நாளை ஞயிற்றுகிழமை (மு.ப.10.30 மணிக்கு பாதுகாவலன் பணிமனை யில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டடத்தில் மா.க.ஈழ வேந்தன் ஈழத் தமிழர் விடுதலை வரலாற்றில் கத்தோலிக்கர்களின் பங்களிப்பு எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளா (உ-8)

## வீடியோ படக்காட்சி

யாழ்.பல்கலைக் கழக புறநிலைப் படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டில் வாரந்தோறும் இடம் பெற்று வரும் கலைத்துவ திரைப்படக் காட்சித் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு புவியியற் துறை செல்வநாயகம் மண்டபத் தில் அசோகா ஹந்தகம எனும் சர்வதேச விருதுகள் பெற்ற சிங்கள இயக்குநரின் நெறியாள்கையில் உருவான 'மே மகே ஸந்த' (இது எனது நிலவு) எனும் சிங்கள வீடியோ திரைப்படக்காட்சி இடம் பெறவுள்ளது.திரைப் படக்காட்சிக்கு முன்னர் **(All roads lead to cinema)** அனைத்துப்பாதைகளும் சினி மாவை நோக்கி எனும் விவரணப் படமும் காண்பிக்கப்படவுள்ளது.

காட்சிகளின் இறுதியில் எழுத் தாளர் அ.யேசுராசா தலைமையில் காண்பித்த திரைப்படங்கள் பற்றிய கலந்துரையாடலும் இடம் பெறவுள ளது.இந் நிகழ்வுக்கு ஆர்வலர்கள் எவரும் வருகை தந்து பயன்பெற முடியுமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித் துள்ளார். (உ)

...உறுப் பினர்கள் இராணுவத் தரப்பின் உளவாளிகளாகச் செயற்படுபவர் ளும் அல்ல.

...சென்றதாகக் கூறப் பட்டிருப்பது முற்றிலும் உண் மைக்கு புறம்பானதாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# நீதித்துறை புனரமைப்புக்கு பாராளுமன்ற குழு அமைப்பு

(கொழும்பு)

நீதித்துறை புனரமைப்பதற் காக பரிந்துரைகளை விடுக்க வென விசேட பாராளுமன்ற குழு வொன்று அமைக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தலை மையில் அமைக்கப்பட்டுள்ள இக் குழுவின் செயலாளராக பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் ஸ்ரீயானி விஜயசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதித்துறை நீதியரசர்கள் நீதிபரிபாலன ஆளணியினர் சட் டத்தரணியினர் பொலிஸார் உட்பட சிறைச்சாலை அதிகாரி கள் தொடர்பாக இக் குழு பரிந்துரைகளை வழங்கவுள் ளதுடன் சிறைச்சாலைகளின் நிலைமைகள் தொடர்பாக ஆராய ந்து குழுவினர் அறிக்கை சமர்பிக்கவுள்ளனர். (தி)

# பொ.ஐ.மு.மத்திய குழு திங்களன்று கூடும்

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி யின் மத்திய நிறைவேற்றுக் குழு வின் விஷேட கூட்டம் ஒன்று எதிர் வரும் 4-ம் திகதி திங்கட் கிழமை ஜனாதிபதி தலைமையில இடம் பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையே கைச்சாத்திடப்படவுள்ள கூட்ட மைப்பு குறித்து விஷேட கவனம் செலுத்தப்படும் என கட்சியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜெய ரட்ணா தெரிவித்துள்ளார்.

கூட்டத்தில் பொது ஜன ஐக் கிய முன்னணியில் அங்கம் வகி க்கும் அனைத்துச் கட்சிகளின தும் ஆலோசனைகள் பெறப்பட்டு அவை தொடர்பாகவும் ஆராயப் படும் என அவர் மேலும் தெரி வித்துள்ளார். (தி)



கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் சிறப்பு விருந்தினர் திருமதி க.ஸ்கந்ததேவன் மங்கள விளக் கேற்றுவதையும் யாழ்.மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் எஸ்.கவியன்பன், ஆசிரியர் மு.சுகுமார் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## சிறுவிளம்பரம்

### (O/L) கணிதம்

புதிய பழைய திட்டத்திற்கமைய கணித பாடத்தின் பெரும் பிரிவுகளான அட்சரகணிதம், கேத்திர கணிதம், எண் கணிதம், புதிய கணிதம் ஆகியவற்றின் சகல அலகுகளையும் ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் A பெறுபேறடைவதற்குக் கற்பிக்கப்படும். சந்திக்கும் நேரம் காலை 6.00 - 9.00 க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (7347)

### தேவை

1. சமையல் வேலை தெரிந்த காரியாலய சிற்றூழியர்.
2. கணக்கியல் லிகிதர்

140, பலாலிவீதி, திருநெல்வேலி என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். சிற்றூழியர் வேலை தொடர்பாக நேரில் வரக்கூடியவர்கள் ஞாயிறு (03.08.03) மாலை 4 மணிக்கு பின் நேரில் வரவும். T.P:-222 2478 (7375)

### SPOKEN ENGLISH

6 மாத காலத்தில் சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி (காலை வகுப்புகள்) பிளாக் வீதி, சங்கானை. (மாலை வகுப்புகள்) 426(302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (7373)

# நல்லூர் உற்சவ கால சிறப்புச் செயலணி கூட்டத்தில் பன்னிரு தீர்மானங்கள் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவத்தினை முன்னிட்டு ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் நேற்று இடம்பெற்ற உற்சவ காலச் சிறப்புச் செயலணிக் குழுக்கூட்டத்தில் 12 முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அவை வருமாறு,

*நல்லூர் உற்சவ காலத்தில் மேற்கொள்ளவேண்டிய வழமையான நடவடிக்கைகளை யாழ் மாநகர சபை மேற்கொள்ளும். அவற்றிற்கு உதவியாக சிறப்புச் செயலணிக்குழு செயற்படும்.

*பிரதான வீதியுடன் அமைக்கப்பட்டுள்ள வீதித் தடை முகாம்களில் மாநகர சபை உத்தியோகத்தர்கள் 2 பேரும் சிறப்புச் செயலணிக்குழு உறுப்பினர் ஒருவரும் தொண்டர் நிறுவன அங்கத்தவர் 2 பேரும் கடமையில் ஈடுபடுவர்.

*ஆலயத்தைச் சுற்றியுள்ள தடை முகாம்களில் மாநகரசபை உத்தியோகத்தர் ஒருவரும் சிறப்புச் செயலணிக்குழு உறுப்பினர் ஒருவரும், தொண்டர் நிறுவன அங்கத்தவர் 2 பேரும் கடமையில் ஈடுபடுவர்.

*10ஆம் திருவிழாவரை அதிகாலை 4 மணியிலிருந்து இரவு 8 மணி வரையும் 10ஆம் திருவிழாவிற்குப் பின்னர் அதிகாலை 3 மணியிலிருந்து இரவு 10 மணி வரையும் தடை முகாம்களில் பாதுகாப்பு சேவை இடம்பெறும்.

*நண்பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரை தடை முகாம்களுக்கூடாக வியாபாரிகளின் வாகனம் உட்செல்ல அனுமதிக்கப்படும்.

*பாடசாலை மாணவர்கள் சீருடையுடன் காலை 8.30 மணிவரை தடை முகாம்களுக்கூடாக பாடசாலை செல்ல அனுமதிக்கப்படும். பாடசாலை முடிந்து வீடு திரும்பும் போது அவர்கள் மாற்று வழியினை பயன்படுத்த வேண்டும்.

*துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் அதிகாலை 4 மணிக்கு திறக்கப்பட வேண்டும்.

*தடை முகாம்களுக்குள் வசிப்பவர்களுக்கும், தொழில்நிலையம் வைத்திருப்பவர்களுக்கும் வாகனம் உட்செல்வதற்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அவர்கள் ஏற்கனவே குறிப்பிட்ட வீதித் தடைமுகாம் ஊடாகச் செல்வதற்கு மட்டுமே அவ்வனுமதி அட்டையினை பயன்படுத்த வேண்டும்.

*சிறப்பு செயலணிக்குழு தினமும் ஒன்றுகூடி ஆலயச் சூழலில் அன்றாடம் எழும் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் முடிவு எடுக்கும்.

*சகல பொது நிறுவனங்களும், அரச நிறுவனங்களும், வெளிநாட்டு நிறுவனங்களும், பாதுகாப்புப் பிரிவினரும் எந்தவொரு காரணத்தை முன்னிட்டும் தடை முகாம்களூடாக வாகனங்கள் செல்ல முடியாது எனத் தீர்மானிக்கப்பட்ட, நேரங்களில் வாகனங்களுடன் உட்செல்லாது ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என எழுத்து மூலம் வேண்டுகோள் விடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

*எந்த சந்தர்ப்பத்திலும் எக்காரணம் கொண்டும் வாகனங்கள் கோயில் வீதியில் நிறுத்த அனுமதிக்கக்கூடாது.

*கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களும் சிறப்புச் செயலணிக்குழுவுடன் இணைந்து செயற்படுவார்கள். கலாசாரத்தை சீரழிக்கும் விதத்தில் ஈடுபடுபவர்களை இனங்கண்டு அவற்றை உடனுக்குடன் சிறப்புச் செயலணிக்குழுவுக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள தொலைபேசி இணைப்பு மூலம் தொடர்புகொள்ளுமாறு பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுவோரும் பொதுமக்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். (உ-4)

# இத்தாலி செல்ல முயன்ற 21 வெளிநாட்டவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக இத்தாலி செல்லும் நோக்கில் தங்கியிருந்த 21 வெளிநாட்டு இளைஞர்களை மத்துகம பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இவர்களில் 11 இந்தியர்களும், 10 பாகிஸ்தானியர்களும் அடங்குவர்.

குறித்த அமைப்பு ஒன்றின் உதவியுடன் மத்துகம பிரதேசத்துக்கு அழைத்து வரப்பட்ட இவர்களை பேருவ்ளை மீன்பிடித்துறைமுகத்தின் ஊடாக இத்தாலிக்கு அனுப்ப உத்தேசித்திருந்ததாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக மத்துகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இவர்களிடம் காலவதியான விசா அனுமதிப்பத்திரங்கள் இருப்பதனால் மேலதிக விசாரணைகளை குடிவரவு குடியகல்வுத்திணைக்களம் மேற்கொண்டுவருகின்றது. (தி)

# மட்டு. கல்குடாப் பிரதேசத்தில் 13 வருடங்களின் பின்னர் இரு பாடசாலைகள் ஆரம்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்குடா பிரதேசத்தில் கடந்த 13 வருடங்களாக மூடப்பட்டிருந்த இரு பாடசாலைகள் கல்விச் செயற்பாடுகளுக்காக நேற்று முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

வீரநகர் தமிழ்க் கலவன் பாடசாலை, வடமுனை வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளுமே நேற்று முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

1990ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்செயலைத் தொடர்ந்து கோரளைப் பற்றுப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட வீரநகர் மற்றும் வடமுனைக் கிராமமக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினர்.

இதனால் இவ்விரு பாடசாலைகளும் கடந்த 13 வருடங்களாக மூடப்பட்டு இருந்தன.

தற்போது நிலவிவரும் சமாதான சூழ்நிலையைத் தொடர்ந்து இவ்விருகிராமங்களிலும் மக்கள் மீளக் குடியமர்ந்து வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்தே இப்பாடசாலைகள் நேற்றுமுதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார். (தி)


## யாழ்ப்பாண மாநகரசபை
### நல்லூர் உற்சவம் 2003 - வீதித்தடை பற்றிய அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு கீழ் குறிப்பிடப்படும் வீதிகள் 03.08.2003 ஆம் திகதி தொடக்கம் 29.08.2003 ஆம் திகதி வரை வாகனப் போக்குவரத்திற்காக மூடப்பட்டிருக்கும்.

01. * அரசடிச் சந்திக்கும் 2ஆம் கட்டை தூண்க்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்;
 * பிராமணக் கட்டுக்குளம் சந்தியில் இருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோவில் வீதியின் அப்பாகம்;
 * செட்டித்தெரு ஒழுங்கையில் இருந்து செட்டித்தெருவின் வடபாகம்;

02. * பேருந்துகள், சிற்றூர்திகள் மற்றும் சுமை கூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியில் இருந்து நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைச் சந்தையூடாகச் செல்லல்;
 * பருத்தித்துறை வீதிக்கும், நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்கு வீதியால் பேருந்துகளும் சிற்றூர்திகளும் செல்லுவது முற்றாகத் தடைசெய்யப்படும்.

03. வாகனத் தரிப்பிடங்கள்
 * முத்திரைச் சந்தைப் பகுதியில் சங்கிலியன் சிலைக்கு எதிர்ப் பக்கமாகப் பருத்தித்துறை வீதியில்;
 * கந்தர்மடச் சந்திக்கு அப்பால் அரசடி வீதியில்;
 * அம்மன் வீதி, பருத்தித்துறை வீதிச் சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதியில்;
 * செம்மணி வீதியில் பூங்காவிற்கு அப்பால்.

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

(C/6445)


### வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தின் நற்கருணை விழா எதிர்வரும் 14ஆம் திகதி பி.ப 5.30 மணிக்கும் திருநாள் திருப்பலி 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 7 மணிக்கும் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (உ-8)

### வருடாந்த உற்சவம்

(கோப்பாய்)

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (உ)

* * * *

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை வீரகத்தி விநாயகர் கோயிலில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெறவுள்ளது. (உ-18)

### கைக்குண்டு வீச்சு

(திருகோணமலை)

திருகோணமலை ஏகாம்பரம் வீதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றின்மீது இனந்தெரியாத நபர்களினால் நேற்று முன்தினம் இரவு கைக்குண்டு வீசப்பட்டது.

இக குண்டுவீச்சினால் கடையின் முற்பக்கம் பாரியசேதத்திற்கு உள்ளாகியபோதிலும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

திருகோணமலைப் பொலிஸார் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை நடத்திவருகின்றனர். (தி)

### பெண்கள் தலைமைக்கான சமூக வலுவூட்டல்

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் மூளாய் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து நடத்தவுள்ள "பெண்கள் தலைமைக்கான சமூக வலுவூட்டல் பயிற்சிக் கருத்தரங்கு" இன்று மு.ப. 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இக்கருத்தரங்கில் திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன், சரோஜா சிவச்சந்திரன், கோகிலா மகேந்திரன், திருமதி ரஜனி இக்பால் ஆகியோர் கருத்துரை வழங்கியுள்ளனர். (உ-8)










நேற்றைய தினம் இடம்பெற்ற யாழ். மத்திய கல்லூரியின் பரிசுத் தினத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல்துறை மூத்த விரிவுரையாளர் ஆர்.சிறிகரன் உரையாற்றுவதையும், சிறப்பு விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், பார்வையாளர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படங்கள்:ஜெ.ஜெராட்

# குடாநாட்டில் இயல்பு நிலை திரும்பிவிட்டதாக சர்வதேசம் கருதுவதில் உண்மை இல்லை

## ஜேர்மன் தூதரக இரண்டாவது செயலர் இளம்பரிதியுடனான சந்திப்பில் தெரிவிப்பு





(யாழ்ப்பாணம்)

**சமாதானப் பேச்சுவார்த்தையூடாக தமிழ் மக்களின் இயல்பு வாழ்வு திரும்புமென சர்வதேச சமூகம் எதிர்பார்த்தது.**

**ஆனால் அந்த எதிர்பார்ப்பு வீணாகி விட்டது என்பதை இங்கு வந்து பார்த்தபோது தான் புரிந்து கொள்ள முடிகிறது.**

கடந்த புதனன்று யாழ்ப்பாண விஜயம் மேற்கொண்ட ஜேர்மனிய தூதரக இரண்டாவது செயலர் கைடோஸ் கிறேடர், யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதியைச் சந்தித்துக் கலந்துரையாடிய வேளை, தனது உள்ளக்கிடக்கையை இவ்வாறு வெளிப்படுத்தினார்.

இச்சந்திப்பின்போது, குடாநாட்டின் தற்போதைய அரசியல் பொருளாதார இராணுவ நெருக்கு வாரங்கள் படையினரின் நடவடிக்கைகளால் பொதுமக்கள் எதிர்நோக்குகின்ற துன்ப, துயரங்கள் குறித்து எடுத்து விளக்கிய இளம்பரிதி, உயர்பாதுகாப்பு வலயங்கள் மற்றும் அவற்றினால் மக்கள் தமது வீடுகளில் மீளக்குடியமர முடியாது அகதி முகாம்களில் தங்கி, படும் அவஸ்தைகள் குறித்தும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் எமது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் விரிவாக எடுத்துக்கூறினார்.

இவற்றையெல்லாம் செவிமடுத்த கைடோஸ் கிறேடர் கருத்துக்கூறுகையில்,

இலங்கையில் தற்போது நிலவும் அமைதியை அடுத்து, இங்கு அனைவரும் இயல்பு வாழ்வுக்குத் திரும்பி மனநிம்மதியுடனேயே வாழ்கின்றனர் என்ற எண்ணமே வெளிநாட்டவர்களிடம் நிலவுகின்றது.

ஆனால், இங்கு வந்து பார்க்கும் போது, பாதுகாப்பு வலயங்களினுள்ளும், இராணுவப்பிடிக்குள்ளும் பொது மக்கள் குடியிருப்புக்கள் உள்ளடங்கி இருப்பதால், பல்லாயிரக் கணக்கான மக்கள் இன்னமும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியாது அகதி முகாம்களில் அல்லல் படுவதை அவதானிக்க முடிகின்றது.

இன்னும் பலர் தமது தொழில்களை செய்ய முடியாது நெருக்குவாரப்படுகின்றனர்.

இப்படியானதோர் சூழ்நிலையில் எவ்வாறு இயல்பு வாழ்வு வாழ முடியும்?

இங்குள்ள மக்களின் உண்மை நிலைமை வெளியுலகிற்கு தெளிவுபடுத்தப்படாததாலேயே, இயல்பு நிலை திரும்பிவிட்டது என்ற மாயத்தோற்றம் உருவாக்கப்பட்டுள்ளது.

உண்மை நிலையை உலகிற்கு உணர்த்த வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது.

எனது அதிகாரத்திற்குட்பட்ட வகையில், நான்இங்கு நேரில் பார்த்தவற்றையும், அறிந்தவற்றையும் வெளியுலகிற்கு எடுத்துக்கூறி உண்மை நிலையை உணர வழிவகுப்பேன் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, ஜேர்மனியில் வாழ்கின்ற இலங்கைத்தமிழரை இங்கு திருப்பி அனுப்புவது தொடர்பில் நேரடி ஆய்வுகளை மேற்கொண்டு ஜேர்மன் அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் வகையில் இங்குவந்த இவர், உயர்பாதுகாப்பு வலயங்கள் மற்றும் மக்களின் மீள் குடியமர்வு ஆகியன தொடர்பில் படை அதிகாரிகளையும் கண்டு கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன், நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை சந்தித்து அவர்களின் குறை, நிறைகளையும் கேட்டறிந்துள்ளார். (உ-4)

# இந்தியாவிலுள்ள இலங்கை மீனவர்களை விடுவிக்கக் கோரிக்கை

## அங்குள்ள அமைச்சருக்கு பேராசிரியர் ஜயலத் கடிதம்

(கொழும்பு)

இந்திய அதிகாரிகளால் பிடித்து வைக்கப்பட்டுள்ள மீன் பிடிப்படகுகளையும் அவைகளில் இருந்த மீனவர்களையும் விடுவிப்பதற்கு ஆவன செய்யும்படி கோரி புனர்வாழ்வு, மீள் குடியமர்வு அகதிகள் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன கேரளமாநிலம் எர்ணா. குளத்தில் மத்திய அரசின் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக விருக்கும் அமைச்சர் பி.சி தோம

## யாழ்ப்பாணம் தேசிய



# இந்தியாவிலுள்ள இலங்கை மீனவர்களை விடுவிக்கக் கோரிக்கை

### அங்குள்ள அமைச்சருக்கு பேராசிரியர் ஜயலத் கடிதம்

(கொழும்பு)

இந்திய அதிகாரிகளால் பிடித்து வைக்கப்பட்டுள்ள மீன் பிடிப்படகு களையும் அவைகளில் இருந்த மீனவர்களையும் விடுவிப்பதற்கு ஆவன செய்யும்படி கோரி புனர் வாழ்வு, மீள் குடியமர்வு அகதிகள் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன கேரளமாநிலம் எர்ணா குளத்தில் மத்திய அரசின் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக விருக்கும் அமைச்சர் பி.சி தோமஸுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இந்திய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு காவலில் உள்ள மீனவர்களில் பெரும்பாலானவர்கள் மீன்பிடி அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றும இந்த அமைப்பு கடந்த காலங்களில் இலங்கை-இந்திய அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிப்பதில் பெரும்பங்கு பணி ஆற்றியிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் ஜயலத் இந்திய அதிகாரிகளின் பிடியில் இருக்கும் படகுகள், படகு சிப்பந்திகளின் விபரம அடங்கிய பட்டியல் ஒன்றையும் இந்திய அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேற்படி அமைப்பின் இயக்குநர் எம்.சி.ஏ.பின்ரோ இந்தியஅமைச்சருடன் கலந்தாலோசிக்க வரவிருப்பது பற்றியும் பேராசிரியர் ஜயலத் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (பி)

### யாழ்ப்பாணம் தேசிய

## கல்வியியல் கல்லூரிச் சமூகத்தின் மானிட விழுமியச் செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களால் ''மொழித் திறனூடாக மானிட விழுமியங்களை மேம்படுத்தல்" எனும் தலைப்பிலான செயற்றிட்டம் நேற்றுக் கைதடி விசேட தேவையுடைய பாடசாலை (நவீலட்) கைதடி முதியோர் இல்லம ஆகியவற்றில் நடைமுறைப்படுத்தப் பட்டது.

கல்லூரியில் ஆரம்பக் கல்வித் துறையில் பயிலும் மாணவர்களும் கல்லூரியின் ஆசிரிய கல்வியாளர் களும் கலந்து கொண்ட இச்செயற்றிடடம் அடுத்த ஆண்டு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ள விசேட கல் விப்பாடத்துறையின் ஆரம்பத்தினை முன்னெடுக்கும் நோக்கில் கல்லூரியின் விரிவுரையாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நேற்று மேற்படி நிறுவனங்களுக்கு விஜயம் செய்த மாணவர்களும் விரிவுரையாளர்களும் முழுநாளும் அங்கு தங்கி நின்று செயற்றிட்டத்தில் ஈடுபட்டதுடன், சிரமதானப் பணிகளிலும் ஈடுபட்டமை குறிப்பிடத் தக்கது. (உ)

## கட்டுநாயக்கா விமான நிலைய புனரமைப்புக்கு ஜப்பான் நிதியுதவி

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் சுமார் ஆயிரம் கோடி ரூபாசெலவில் நவீனமயப்படுத்தப் படவுள்ளது.

மூன்று கட்டங்களாக மேற் கொள்ளப்படவுள்ள நவீனமயப் படுத்தும் பணிக்கு, ஜப்பானிய அரசாங்கம் நிதிஉதவி வழங்கியுள் ளதுடன், இதற்கான ஒப்பந்தமொன்றிலும் இரு நாடுகளும் ஒப்பமிட்டுள் ளன.

விமான நிலையம் நவீன் மயப் படுத்தும் திட்டத்தின் கீழ் இரண்டு லட்சம் சதுரஅடி ஸ்தீரணத்தில் விமானநிலைய தரிப்பிடம், பிரயாணிகள் தங்குமிடம், மற்றும் தகவல் தொலைத்தொடர்பு, பிரயாண, தகவல் வசதிகளும் பொருத் தப்படவுள்ளன. (வ)

## திலீபன் மருத்துவ மனையில்

## இலவச கண்வைத்திய முகாம்

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை மாவட்ட வைததியசாலை அபிவிருத்திச்சபை நெடுந்தீவுப் பகுதி மக்களின் நன்மை கருதி நெடுந்தீவில் இலவச கண் வைத்திய முகாம் ஒன்றை நடத்த வுள்ளது.

200கண்பார்வை குறைந்தவர் களுக்கு இலவச மூக்குக்கண்ணாடி களை இந்த இலவச கண்வைத்திய முகாம் மூலம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு தியாகி திலீபன் மருத்துவமனையில் எதிர்வரும் 4ஆம் திகதி, வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி.கே.மயிலேறும்பெருமான் தலைமையில் இவ் இலவச கண் வைத்திய முகாம் நடைபெறவுள்ளது.

நீரிழிவு, குருதியமுக்க நோய் களுக்கான வைத்திய சேவைகளும், பரிசோதனைகளும் அங்கு நடை பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள் ளது. (உ-52)

### அபுதாபி ஆணழகருக்கு பருத்தித்துறையில் கௌரவிப்பு விழா

(பருத்தித்துறை)


அபுதாபி ஐக்கிய அரபுக் குடியரசின் ஆணழகனும் பருத்தித்துறை கலைஞர் வட்ட மூத்த உறுப்பினருமான பொன்.பாலனைக் கௌரவித்து, பருத்தித்துறைக் கலைஞர்வட்டம் விழாவொன்றை நாளை ஞாயிற்றுக் கிழமை பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடாத்த வுள்ளது.


யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம்.நடராஜ சுந்தரம் தலைமையில் நடைபெற வுள்ள, விழாவிலே பருத்தித்துறை பிரதேச செயலா ஏ.சிவசுவாமி கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்ள வுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத துறை விரிவுரையாளர். வி.சுந்தரேசன், சட்டத்தரணி எஸ்.ரவீந்திரன், பருத தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய அதிபர் ஏ.ஜெகநாதன் உட்பட இன்னும் பலர் நிகழ்வில் சிறப்புரை யாற்றவுள்ளனர். (உ-52)




கனடாவிலுள்ள, பருத்தித்துறை மெ.பெ.உ பாடசாலை பழைய மணவர் சங்கத்தின் வருடாந்த இராப்போசன விருந்திற்குத் தலைவி திருமதி. என். நல்லருளானந்தம் தலைமைதாங்கி உரையாற்றுவதையும் பிரதம விருந்தினர். எவ்.வி.ரீ வேலுப்பிள்ளை மற்றும் செயற்குழு உறுப்பினர்களையும் படத்தில் காணலாம். (படங்கள்: பரு.நிருபர்)





மாகாண மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் சம்பியனாகிய யாழ்.ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய அணி, பாடசாலை அதிபர் திருமதி எஸ்.ஜெயவீரசிங்கம், பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர்கள்ஆகியோருடன் காணப்படுகின்றனர். (படம் : சுண்டுக்குளி நிருபர்)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# ஆடல் கலையின் நுட்பங்களைக் காட்டும் சிற்பக் கலைஞர்களின் மதிநுட்பம்

கலைகளிலே நடனமும் சிற்பமும் முப்பாிமாண இயல்புடையவை. ஆதி மனிதன் வேட்டையாடவும், தீ மூட்டவும் கற்களைப் பயன்படுத்தினான். காலப்போக்கில் அறிவு விருத்தி அடைய அக்கற்களிலே கற்பனை உருவங்களைசெதுக்கவும் வரையவும் கற்றுக் கொண்டான். இதனையே "கல்லிலே கலைவண்ணம் கண்டான்" எனக் கூறப்படுகிறது. இவ்வாறு வளர்ச்சிபெற்ற சிற்பங்களை வில்டி யூறன் என்ற ஆங்கில கவிஞர் "எழில் அழகின் தோறறமோ சுந்தரத் திருவடிவோ" என எடுத்து இயம்புவதற்கு சிற்பக்கலை தத்துவங்கள் முக்கிய சான்றாக காணப்படுகிறது எனக் கூறுகிறார்.

நடனக் கலையானது மக்களின் சமூக, சமய வாழ்வில் முக்கியமாக இடம்பெற்றிருந்தது. -இது இறையுணர்வினை ஆடல், பாடல், வாத்தியம், நடிப்பு, ஒப்பனை என்பவற்றிற்கு ஊடாக வெளிப்படுத்தும் ஒரு கூட்டுக்கலையாக விளங்குகிறது. இறைவனுக்கு ஒருவர் அர்ப்பணிக்கும் மலர், நைவேத்தியம் போன்றவற்றிலும் பார்க்க நிருத்தானம் சிறந்தது என விஷ்ணு தர்மோந்திர புராணம் கூறுகிறது. இவ்வகை சிறப்புற்ற இக்கலைக்கு சிற்பிகள் தத்தம் கலைத்திறனையும் கற்பனையினையும் பயன்படுத்தி அழியாநிலை



அளித்துள்ளனர்.

சிற்பிகளுக்கு இத்தகைய ஆழ்ந்த கருத்துடைய ஆழமான சிலைகளை வடிப்பது அவர்களின் ஒரு வகை இறைவணக்கமாகக் கருதப்படுகிறது. பாவாலும், எழுத்தாலும், சொலலினாலும் கூறமுடியாத ஞானப் பேருண்மைகள் பலவற்றை காலத்தால் அழியாத கல்ஓவியங்களாக செதுக்கித் தந்துள்ளமை அவர்களின் ஆழ்ந்த அறிவைக் காட்டிநிற்கிறது.

இவற்றைக் குகை சிற்பங்கள், ஆலயங்கள் என்பன தெளிவாக காட்டியிருக்கின்றன. ஆலயங்களாக ஸ்ரீரங்கம், திருவண்ணாமலை, திருவர்ணக்கா, சிதம்பரம், தஞ்சாவூர் முதலியனவும்அஜந்தா, எல்லோரா போன்ற குகைச்சிற்பங்களிலும்



மனதில் பதியத்தக்க வண்ணம் சிற்பவேலை செய்யப்பட்டுள்ளன. மேலும் மத்தியகால சிற்பங்களில் அன்றாட கிரியைகளில் நடனமும் வாத்தியமும் முக்கிய அங்கமாக நிகழ்ந்ததை சிலைகளுடாக நோக்கும் போது இவைகள் சிற்பத்தில் மாத்திரமல்லாமல் மற்றும் கலையம்சங்கள் யாவற்றிலும் ஆற்றலும் அனுபவமும் கொண்டிருந்தார்கள் என் அறியலாம். இதுமட்டு மன்றி இதுசம்பந்தமான தத்துவங்களை யம் பொறியில் தன்மைகளையும் நிர்வகிபபதில் திறமைமிக்கவ்களாக இருந்துள்ளார்கள்.

சிந்துவெளி காலநதொட்டு இக்காலம்வரை நாம் நடன சிற்பங்களை நோக்கக்கூடியதாக வுள்ளது சிந்துவெளியில் வெண்கலத்தாலான நடனமாதின் சிலையும், முழுமையற்ற ஆணின் சிலையும் பிற்கால நடராஜ வடிவத்தின் முன்னோடியென சேர் ஜோன் மார்ஷல் கூறியுள்ளார். வேதகாலத்தில் நடனசிற்பங்கள் கிடைக்காவிடினும் நடனம் இருந்தமைக்கான குறிப்புக்கள் காணப்படுகின்றன. மேலும் இதிகாச புராணகாலங்களில் இவை நன்கு வளர்ந்து விட்டன. இக்காலத்திலே நாட்டிய சாஸ்திரம் உருப்பெற்றது எனலாம் காஞ்சி, மதுரா, அமராவதி, நாகார்ஜினி, கொண்டா, எல்லோரா ஆகிய இடங்களில் காணபபடும் நடனசிற்பங்களை நோகரும் போது அவற்றில் நாட்டிய சாஸ்திரவிதிகளை நோக்கக்கூடியதாக உள்ளன.

கி.பி.6ம்-9ம் நூற்றாண்டு காலங்களில் நேர்த்தியான கலைஅழகு வாய்ந்த நடராஜ சிலைகள் உள்ளன. இவற்றை சீயமங்களம் குகை மாமல்லபுர ரதங்கள் காஞ்சி கைலாச நாதர் ஆலயம் என்பவற்றில் காணலாம். கி.பி.6ம்நூற்றாண்டு அவுரங்கப் பாட்குகைகள் காணப்படும் சிற்பங்களும் ஓவியங்களும் நடனத்தில் அமைந்துள்ள நயத்தை தெளிவாக விளக்குபவையாக உள்ளன. உணர்ச்சி பூர்வமாக யோசனையில் ஆழ்ந்திருக்க நடனமாடுபவர் நடுநாயகமாக மையத்திலேநிற்க மகளிர் கூட்டம் இருமருங்கிலும் நாதகீதம் முழங்குகிறார்கள். அவர்கள் ஒருத்தி மூங்கில் குழாயால் ஆக்கப்பட்ட புல்லாங்குழல் ஒன்றை ஊதுவதை சித்திரிக்கிறது. இத்தகைய புல்லாங்குழல் அன்று தொட்டு இன்றுவரை கையாளப் படுவதை காணலாம் மேலும் சிவன் தண்டு முனிவருக்கு நடனத்தின் கால் அசைவுகளை புகட்டும் சிற்பமும் அவர் பரதருக்கு நாட்டியத்தை கற்பிக்கும் சிற்பமும்



கி.பி.7ம் நூற்றாண்டு மாமல்ல சிற்பங்களில் உள்ளன.

கி.பி.10-13ம் நூற்றாண்டில் சந்தல்ல அரசனால் உருவாக்கப்பட்டதும் உலகப் புகழ்பெற்றதுமான கஜிரகோ ஆலயங்களில் இன்பமயமான வாழ்க்கையை சித்திரிக்கும் சிற்பங்கள் அமைந்துள்ளன. அரம்பையோ தேவதையோ இவ்வுலகில் பிரவேசித்துள்ளாள் என ஆச்சரியப் படும் அளவிற்கு சிற்பியின் அறிவியல் திறன் அவ் உயிாபுள்ள சிலைகளில் பிரதிபலிக்கிறது.

இராஜஸ்தானில் உள்ள அபு மலையில அமைந்துள்ள தில்வாராக் கோயில் (கி.பி. 11-13 நூற்றாண்டு) மிகவும சிறப்பாகவும் கம்பீரத் தோற்றப்பொலிவுடனும் காட்சியளிக்கும் கலைக்கூடம் எனக் கூறலாம். இவ்வாலயத் தூண்கள், சுவர்கள் தூய வெண்சலவைக் கற்களால் ஆக்கப்பட்டவை அவற்றில் செதுக்கப்பட்ட சிலைகள் ஒவ்வொன்றும் உயர் கலை அம்சங்கள் பொருந்திய தன்மைனய நோக்கின் உயர்ந்த பொறுமையும் இறையுணர்வும் நிறைந்த சிற்பிகளால் பலவருடங்களாக இவை செதுக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளலாம். இச்சிற்பங்கள் சாதாரண மக்களை கனவுலகில் இருக்கிறோமோ என எண்ணத்தூண்டுகின்றன.

கொணராக்கில் அமைக்கப்பட்டுள்ள சூரியனார் கோயிலில் உள்ள உயிர்சிற்பங்கள் 13ம் நூற்றாண்டின் கலைக்கு பிரிதொரு சான்றாகும் அங்கு காணப்படும் நடன மண்டபமும் பலரகப்பட்ட சிற்பங்களும் சிற்ப அகராதிஒன்றை தாங்கி நிற்பதுபோன்று காட்சிதருகின்றனவாம் பெரியஉருவத்தில் வடிக்கப்பட்ட அழகிய பெண்களைக்கொண்ட சிலைகள்பல பலதரப்பட்ட இசைக் கருவிகளை இசைத்துக் கொண்டிருப்பதும் அவற்றிற்கிடையே பெண்கள் கூட்டம் கூட்டமாக நடனம் ஆடிக கொணடிருப்பதைப் பார்க்கின் ஏதோ ஒரு இசைவிழாவின் பங்குகொள்கிறோம் என எண்ணும்அளவில் விளங்கு கின்றன அங்கே பக்க வாத்தியங்கள் இசைப்பதுபோன்று மேற்பகுதி அவயங்கள் தெளிவாகவும் முப்பரிமாண அமைப்பையுடையவையாகவும் காட்சிதருகின்றன.

சிதம்பரத்தில் உள் வீதிகள் மதில்கள் போன்றவைகளில் 108 காரணங்களையும் சான்றுகள் தொடர்

செல்வி ரோகினி
மருதவாணர்

பாண விளக்கங்களையும் நாட்டி சாஸ்திரத்தில் குறிக்கப்பட்டுள்ள நடன அசைவுகளும் சிற்பியின் உளியால் தெளிவாக்கப்பட்டுள்ளது நட்டுவாங்கத்தில் அமைந்த நடனத்தின் அசைவுகளையும் தூக்கிய திருவடியின் அசைவுகளையும் ஊன்றிய திருவடியின் உறுதியுடன் கூடிய இயல்பையும் காட்டிநிற்கும் சிற்ப அம்சங்கள் காணப்படுகின்றன. மேலும் சோழர் காலத்தில் சிற்பங்கள் கவர்ச்சிகரமாகவும் வசீகரமாகவும் அமைந்துள்ள காரணத்தால் பார்ப்பவர் மனதில் உணர்ச்சிகளையும் அலைமோதும் ஆசைகளையும் தூண்டிவிடக்கூடியனவாக விளங்குவது குறிபபிடத்தக்கதாகும்.இத்தோற்றங்கள் நித்திய வினோதா என அழைக்கப் படுவதோடும் அல்லாமல் தொடர்ச்சியான மகிழ்வைத் தருபவவையாக உள்ளன. அழகு நிறைஅணிகளை அணிந்துகொண்டு காட்சியளிப்பது ஆடைஅணிந்திருப்பது போன்ற ஒரு மாயத்தோற்றத்தை தருகிறது.



"இந்து ஆகம முறைப்படி அமைக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட சிற்பங்கள் மிகவும் சக்திவாய்ந்தவை ஆகவும மன உணர்ச்சியை தூண்டுபவையாகவும் தெய்வீக இசையை கூறுபவையாகவும் அமைந்துள்ள சிற்ப தத்துவங்கள் அதிகமாக தெய்வீக காதலிலும் உள்ளத்து உணர்ச்சியிலும் முக்கியமாக தங்கியுள்ளன. அத்துடன் இக்காட்சி பூரணமானதும் உள்ளத்தை மெய்சிலிர்க்கச் செய்வதும் அல்லாமல் உடலையும் தழுவிச் செல்கிறது. முக்கியமாக கல்லிலே செதுக்கப்பட்டு சிற்பங்கள் ஓர் அளவிற்கு மனிதஇனத்தின் அன்பின் மென்மையைக்காட்டி நிற்கிறது". என உலகக் கலையின் பொக்கிஷம் என்ற நூலின் ஆசிரியர் சென்னி கூறுகிறார். இவ்வாறு இந்திய சிற்பங்களும் சித்திரங்களும் நடனக்கலையை முன்வைப்பது போன்று வேறு எந்தநாட்டுக் கலையும் நாட்டியத்தில் சிறப்பிக்கவில்லை என்று கூறலாம். நடனம் வாழ்க்கையோடு ஒன்றிய எளிமையான தத்துவங்கள்நிறைந்த கலை. இக்கலையை மெருகூட்டும் சிற்பங்கள் இருக்கும்வரை அதன் சிறப்பிற்கு எல்லையில்லை.

சிற்பிகளுக்கு இத்தகைய ஆழ்ந்த கருத்துடைய ஆழமான சிலைகளை வடிப்பது அவர்களின் ஒரு வகை இறைவணக்கமாகக் கருதப்படுகிறது. பாவாலும், எழுத்தாலும், சொலலினாலும் கூறமுடியாத ஞானப் பேருண்மைகள் பலவற்றை காலத்தால் அழியாத கல்ஓவியங்களாக செதுக்கித் தந்துள்ளமை அவர்களின் ஆழ்ந்த அறிவைக் காட்டிநிற்கிறது.

இவற்றைக் குகை சிற்பங்கள், காணப்படுகின்றன. மேலும் இதிகாச புராணகாலங்களில் இவை நன்கு வளர்ந்து விட்டன. இக்காலத்திலே நாட்டிய சாஸ்திரம் உருப்பெற்றது எனலாம் காஞ்சி, மதுரா, அமராவதி, நாகார்ஜினி, கொண்டா, எல்லோரா ஆகிய இடங்களில் காணபபடும் நடனசிற்பங்களை நோககும் போது அவற்றில் நாட்டிய சாஸ்திரவிதிகளை நோக்கக்கூடியதாக உள்ளன.

கி.பி.6ம்-9ம் நூற்றாண்டு காலங் ... பையோ தேவதையோ இவ்வுலகில் பிரவேசித்துள்ளாள் என ஆச்சரியப்படும் அளவிற்கு சிற்பியின் அறிவியல் திறன் அவ் உயிாபுள்ள சிலைகளில் பிரதிபலிக்கிறது.

இராஜஸ்தானில் உள்ள அபு மலையில அமைந்துள்ள தில்வாராக் கோயில் (கி.பி. 11-13 நூற்றாண்டு) மிகவும சிறப்பாகவும் கம்பீரத் தோற்றப்பொலிவுடனும் காட்சியளிக்கும் கலைக்கூடம் எனக் கூறலாம். இவ்வாலயத் தூண்கள், சுவர்கள் தூய

பாண விளக்கங்களையும் நாட்டி சாஸ்திரத்தில் குறிக்கப்பட்டுள்ள நடன அசைவுகளும் சிற்பியின் உளியால் தெளிவாக்கப்பட்டுள்ளது நட்டுவாங்கத்தில் அமைந்த நடனத்தின் அசைவுகளையும் தூக்கிய திருவடியின் அசைவுகளையும் ஊன்றிய திருவடியின் உறுதியுடன் கூடிய இயல்பையும் காட்டிநிற்கும் சிற்ப அம்சங்கள் காணப்படுகின்றன. மேலும் சோழர் காலத்தில் சிற்பங்கள் கவர்ச்சி ... பொக்கிஷம் என்ற நூலின் ஆசிரியர் சென்னி கூறுகிறார். இவ்வாறு இந்திய சிற்பங்களும் சித்திரங்களும் நடனக்கலையை முன்வைப்பது போன்று வேறு எந்தநாட்டுக் கலையும் நாட்டியத்தில் சிறப்பிக்கவில்லை என்று கூறலாம். நடனம் வாழ்க்கையோடு ஒன்றிய எளிமையான தத்துவங்கள்நிறைந்த கலை. இக்கலையை மெருகூட்டும் சிற்பங்கள் இருக்கும்வரை அதன் சிறப்பிற்கு எல்லையில்லை. □

---

## சிஹல உறுமய ஏற்பாட்டில்

# தமிழர்களுக்கு எதிரான பிரசாரம் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

வடபகுதி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தென்பகுதி வெள்ளையனுக்கு என்ற தொனிப்பொருளிலான பிரசார நடவடிக்கை ஒன்று சிஹல உறுமயவின் ஏற்பாட்டில் கொழும்பில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

சிஹல உறுமயத்தலைவர் திலக் கருணரட்ன தலைமையில் நுகேகொட தர்மராம விகாரைக்கு அருகே மு.ப.9.30மணிக்கு இப் பிரசார நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

தற்போதைய அரசியல் சூழநிலை மற்றும் விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்கும் அரசின் போக்கு, மேற்குலக நாடுகளிடம் நாட்டை அடகு வைக்கும் நடவடிக்கைகள் போன்றவற்றை மக்களுக்கு உணர்த்தும் வகையிலேயே இப்பிரச்சார நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## இறப்பர்செய்கை மானிய உதவி அதிகரிப்பு

(கொழும்பு)

இறப்பர் செய்கையின் மானிய உதவி நேற்றுமுதல் 50ஆயிரத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது என கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் றோகித போதல்லாகம தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க கடந்த காலங்களில் 50ஆயிரமாக இருந்துவந்த மானியத்தொகை நேற்றிலிருந்து 1லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சிறுதோட்ட உரிமையாளர்களின் முதலீட்டை அதிகரிக்கும் நோக்கிலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (தி)

## சட்டமா அதிபரால்

# வாபஸ் பெறப்பட்ட 59 வழக்குகள் தள்ளுபடி

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்ற ஒப்புதல்வாக்கு மூலங்களை மட்டும் ஆதாரமாகக் கொண்டு கிழக்கு மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 59வழக்குகளை சட்டமாஅதிபர் வாபஸ் பெறப்பட்டதைஅடுத்து இவ் அனைத்துவழக்குகளுப் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 23ஆம் திகதியிலிருந்து ஜூலை 18ஆம் திகதி வரையான காலப்பகுதிகளில் திருகோணமலை மேல்நீதிமன்ற அமர்வின் போதே இவ்வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

சட்டமா அதிபரின் உத்தரவின்பேரில் அரச சட்டத்தரணி எஸ்.எம்.ஹலீம்டீன் இவ் 59வழக்குகளையும் தாம் வாபஸ் பெறுவதாக நீதிமன்றில் தெரிவித்ததையடுத்து, மேல் நீதிமன்ற நீதிபதி சுப்பிரமணியம் பரமராசா வழக்குகளைத் தள்ளுபடிசெய்து எதிரிகளை விடுதலை செய்துள்ளார். (உ-18)

# முஸ்லிம் பிரதிநிதிகள் தம் மனக்குறைகள் பற்றி ஒன்ராரியோ மாஜி பிரதமரிடம் விபரிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளில் முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளும் கவனத்தில் எடுக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும்என இலங்கைக்கு வருகைதந்துள்ள கனடா ஒன்ராரியோ பிராந்திய முன்னாள் பிரதமரும் போரம் ஒப்பெடரேசன் அமைப்பின் தலைவருமான பொப்ரேயிடம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியலமைப்பு விவகாரக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த செவ்வாயன்று இரவு அமைச்சர் ரவூக்ஹக்கீம் தலைமையில் மேற்படி குழு மற்றும் கனடா நாட்டின் இலங்கை உயர்ஸ்தானிகர் ஆகியோர் கொழும்பில் பொப்ரேயைச் சந்தித்தே சுமார் 2மணித்தியாலம் கலந்துரையாடியபோதே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி சந்திப்பின்போது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள், அதில் முஸ்லிம் மக்களின் தேவைகள், அபிலாசைகள், அவர்கள் கடந்துவந்த பாதைகள், முஸ்லிமகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆகியனபற்றி விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது முஸ்லிம்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்படவேண்டும் இது தொடர்பாக கவனத்தில் எடுக்கப்பட்டு ஸ்திரமான சாதகமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டியது முக்கியமானது என ஒன்ராரியோ முன்னாள் பிரதமரிடம் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

மேற்படி கலந்துரையாடலில் சட்டத்துறை பேராசிரியர் லக்ஷ்மன் மாரசிங்க, அரசியலமைப்பு விவகார நிபுணர் கலாநிதி ஜயம்பதி விக்ரமரெட்ண ஆகியோருடன் அரசியலமைப்பு விவகாரக்குழு சார்பில் ரிஷாட் பதியுதின், எம்.ரி.ஹஸனலி, சட்டத்தரணி அன்வர் இஸ்மாயில், என்.எம்.சஹீட், எம்.எச்.எம்.சல்மான், ஏ.எம்.பாயிஸ் மற்றும் பல அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்து கொணடமை குறிப்பிடத்தக்கது. (உ-18)




இலங்கை வங்கியில் 64வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி பிராந்திய நிலையத்தின் நடைபெற்ற நிகழ்வு.

## பல்கலைக்கழகங்களுக்கிடையே மெய்வல்லுநர்போட்டி ஆரம்பம்

இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் இன்றும் நாளையும் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

கொழும்பு பல்கலைக்கழகம் நடந்துகின்ற இப்போட்டியில் 11 பல்கலைக்கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்றுவதற்கான யாழ்.பல்கலைக்கழக வீர, வீராங்கனை ஏற்கனவே கொழும்பு சென்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

## தம்பதிகள் இணைத் தலைமையில் உலகு சுற்றும் படகுப்போட்டி

உலகில் உள்ள சமுத்திரங்கள் ஊடாக நடத்தப்படுகின்ற படகுப் போட்டி ஒன்றில் ஒரு குழுவிற்கு கணவனும், மனைவியும் முதல் முறையாக இணைத்தலைவர்களாகச் செயற்படவுள்ளார்கள்.

2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் நடை பெறவுள்ள வோல்வோ சமுத்திரப்படகுப் போட்டிக்கே பிரிட்டனைச் சேர்ந்த நீல்மைக் டொனாட்டும் அவரது மனைவியான அமெரிக்காவைச் சேர்ந்த லீசாவும் இணைத்தலைவர்களாகச் செயற் பட இணங்கியுள்ளார்கள்.

உலகைச் சுற்றி வருகின்ற இந்த சமுத்திரப்படகுப்போட்டி ஒன்பது மாதங்கள் நீடிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவ்விருவரும் 2001 மற்றும் 2002ஆம் ஆண்டுக்கான போட்டியின் போது தனித்தனித் தலைவர்களாகச் செயற்பட்டுள்ள போதிலும் இம்முறை நடைபெறவுள்ள போட்டியில் இணைத் தலைவர்களாக செயற்படப் போவதாக அறிவித்துள்ளனர்.

இப்போட்டியில் தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, தென் அமெரிக்கா, ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய கண்டங்களில் உள்ள படகுத்தரிப்பிடங்களில் அவ்வப்போது படகுகள் தரித்து நிற்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-68)

## தேசிய பற்பின்ரன் போட்டி ஆசிய வீரர்கள் முன்னணி

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலக பற்பின்ரன் சம்பியன்சிப் போட்டியின் ஆண்களுக்கான இரண்டாம் சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதுவரை நடைபெற்றுள்ள போட்டிகளில் 13பேர் மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர். உலகத்தரப்படுத்தலில் முதலாம நிலையில் உளள சீனவீரர் செம் கொங்க், ஜேர்மன வீரானா ஜென் ஸ்ரோக்கை 15:5, 15:1 என்ற செற கணக்கில் தோற்கடித்து மூன்றாம் சுற்றிற்கு தகுதி பெற்றுள்ளார்.

தவிரவும், கொங்கொங், தென் கொரியா, மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், சீனா, டென்மார்க் மற்றும் இந்தோனேசியா வீரர்கள் மூன்றாம் சுற்றிற்கு தகுதி பெற்றுள்ளனர்.

தரப்படுத்தலில் இரண்டாம் நிலையில் உள்ள டென்மார்க் வீரர் கெனத் ஜோன்சன் மூன்றாம்நிலையிலுள்ள இந்தோனேஷியாவின் தௌபீக் கிதாயித் ஆகியோரும் மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர். (உ-68)

## கூடைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியன் பட்டத்தை தட்டிய கவசவாகனப் படையணி

இலங்கையின் இராணுவப் படையணிகளுக்கிடையிலான கூடைப் பந்தாடடப் போட்டியின் சம்பியன் பட்டத்தினை இலங்கை கவசவாகனப் படையணி கைப்பற்றியுள்ளது.

இறுதிப்போட்டியில் கவசவானப் படையணியும் இராணுவப் பொலிஸ் அணியும் மோதிக்கொண்டன.

இப்போட்டிகள் கடந்தவார இறுதியில் இராணுவத் தலைமையக கூடைபபந்தாட்டத் திடலில் நடைபெற்ற போது இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 12 படையணிகள் கலந்து கொண்டன்.

மிகவும் விறு விறுப்பாக நடைபெற்ற இறுதிப்போட்டியில் 63:49 எனற புள்ளிகள் அடிப்படையில் கவசவாகனப் படையணி வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தினை சுவீகரித்துக்கொண்டது.

(உ-68)

## இந்திய அணியில் இடம் பிடிக்க வினோத் காம்பிளி முனைப்பு

இந்திய கிரிக்கெட் அணியில் தம்மால் மீண்டும் இணைந்து கொள்ள முடியுமென்று அதிரடித் துடுப்பாட்ட வீரரான வினோத் காம்பிளி தெரிவித்துள்ளார்.

1996ஆம் ஆண்டு நியூசிலாந்து அணியுடனான டெஸ்ற்தொடரில் இறுதியாக விளையாடிய வினோத் காம்பிளி அதன் பின்னர் அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

தென்னாபிரிக்காவின் பிராந்திய அணிக்காக விளையாடிவிட்டு இந்தியா வந்துள்ள இவர், அணியில் மீண்டும இணைந்து கொள்வதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப் போவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக இந்தியாவில் நடைபெறவிருக்கின்ற முதல்தர போட்டிகளில் ஓட்டங்களைக் குவித்து தோவாளர்களின் கவனத்தை ஈர்க்கப் போவதாகவும் அவர் மேலும்கூறியுள்ளார். (உ-68)




## குத்துச்சண்டை வீரரின் சண்டைக் காட்சிகள் அடங்கிய ஒளிநாடா வெளியானது

சர்ச்சைக்குரிய உலகின் முன்னாள் பிரபல்ய குத்துச்சண்டை வீரர்மைக்டைசன் அண்மையில் விடுதியொன்றில் சண்டையிட்ட காட்சி அடங்கிய வீடியோ ஒலிப் பதிவு நாடா வெளியிடப்பட்டுள்ளது.

முன்னாள் குத்துச்சண்டை சம்பியனான மைக்டைசன் அடிக்கடி சண்டையிட்டும் பொது இடங்களில் கோபத்துடன் நடந்துகொண்டும் சர்ச்சைகளில் சிக்கிக்கொள்வது வழக்கமாகிவிட்டது.

இதே போன்று கடந்தவாரம் நியூயோர்க் விடுதிஒன்றில் இவரிடம் கையொப்பம் கேட்கச் சென்றவர்களிடம கோபமாக நடந்து கொண்டார் எனவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

மைக்டைசன், இதை மறுத்ததுடன் தன்னிடம் கையெழுத்து வாங்க வந்த நபர் தம்மை விரட்டியதாகவும் கூறியிருந்தார்.

எனினும் விடுதிக் கண்காணிப்புக் கமராவில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது. இந்த வீடியா ஒலிநாடாவே தற்போது வெளியிடப்பட்டுள்ளதுடன் பெரும் பரபரப்பினையும் அது ஏற்படுத்தியுள்ளது. (உ-68)

## யாழ். மாவட்ட கிரி. சங்க

## 9ஆவது துடுப்பாட்ட அணி தம்புல்ல பயணம்



கல்லூரியைச் சேர்ந்த வி.ரஜீவ்குமார் உபதலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆர்.கிருஸ்ணராஜா (யாழ். இந்துக் கல்லூரி), ச.அகிலன் (பரி



## முன்னோடி வீரர் சினேடின் சிடான் ஓய்வு பெறப்போவதாக அறிவிப்பு

கால்பந்தாட்டத் துறையில் சிறந்த வீரராகத்திகழும் பிரான்சின் சினேடின் சிடான், 2005ஆம் ஆண்டிற்கான யான ஒப்பந்தம் ஒன்றையும் அவர் செய்திருந்தார். இதன் படி உலகின் அதிகமானபணத் தொகைக்காக

காட்சி அடங்கிய வீடியோ ஒலிப் பதிவு நாடா வெளியிடப்பட்டுள்ளது.

முன்னாள் குத்துச்சண்டை சம்பியனான மைக்டைசன் அடிக்கடி சண்டையிட்டும் பொது இடங்களில் கோபத்துடன் நடந்துகொண்டும் சர்ச்சைகளில் சிக்கிக்கொள்வது வழக்கமாகிவிட்டது.

இதே போன்று கடந்தவாரம் நியூயோர்க் விடுதிஒன்றில் இவரிடம்


தன்னிடம் கையெழுத்து வாங்க வந்த நபர் தம்மை விரட்டியதாகவும் கூறியிருந்தார்.

எனினும் விடுதிக் கண்காணிப்புக் கமராவில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது. இந்த வீடியா ஒலிநாடாவே தற்போது வெளியிடப்பட்டுள்ளதுடன் பெரும் பரபரப்பினையும் அது ஏற்படுத்தியுள்ளது.

(உ-68)

## யாழ். மாவட்ட கிரி. சங்க

# 9ஆவது துடுப்பாட்ட அணி தம்புல்ல பயணம்




(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கிரிக்கெற் சங்கத்தின் 9ஆவது துடுப்பாட்ட அணி, 19 வயதிற்குட்பட்டோர் அணியின் நான்காவது அணியாக நேற்று தம்புல்ல சென்றுள்ளது. இவ்வணிக்கு குடாநாட்டுப் பாடசாலைகளில் இருந்து மிகத் திறமையான வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இவ்வணிக்குப் பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த ப.லவேந்திரா தலைவராகவும், யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த வி.ரஜீவ்குமார் உபதலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆர்.கிருஸ்ணராஜா (யாழ். இந்துக் கல்லூரி), ச.அகிலன் (பரியோவான் கல்லூரி), கே.றெகான் (யாழ். மத்திய கல்லூரி), எஸ்.குணதாஸ் (ஸ்ரான்லிக் கல்லூரி), எஸ்.உமாநாத (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஏ.யசிந்தன் (யாழ். மத்திய கல்லூரி) ரி.கஜேந்திரன் (ஸ்ரான்லிக்கல்லூரி), வி.மணிவண்ணன் (யாழ். இந்துக் கல்லூரி), கெ.ராஜாதித்தன் (யாழ். இந்துக் கல்லூரி), ரி.பிரகாஸ் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஏ.துஷ்யந்தன் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), ஆர்.விநோதன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), ஆர். வைகுந்தன் (ஹாட்லிக் கல்லூரி) ஆகியோர் அடங்கிய இவ்வணிக்கு சி.லக்ஷுமிகாந் பயிற்றுநராகவும், ஜெகநாதன் முகாமையாளராகவும், வி.ஆர். சண்முகலிங்கம் இணைப்பாளராகவும் கடமைபுரியவுள்ளனர்.

யாழ. மாவட்ட அணி எதிர்வரும் 4ஆம திகதி திருகோணமலை அணியுடனும், 5ஆம் திகதி வவுனியா அணியுடனும், 6ஆம் திகதி மன்னார் அணியுடனும், 9ஆம் திகதி மட்டக்களப்பு அணியுடனும் போட்டியிடவுள்ளது. (உ)



# முன்னோடி வீரர் சினேடின் சிடான் ஓய்வு பெறப்போவதாக அறிவிப்பு

கால்பந்தாட்டத் துறையில் சிறந்த வீரராகத்திகழும் பிரான்சின் சினேடின் சிடான், 2005ஆம் ஆண்டிற்கான சர்வதேச கால்பந்தாட்டப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார்.

ஸ்பெயினின் கால்பந்தாட்டக் கழகமான றியல்மெற்றிக்குடனான தனது ஒப்பந்தம் நிறைவுக்குவந்ததும் சர்வதேச போட்டிகளிலிருந்தும் ஓய்வுபெறப்போவதாகவும் இவர் தெரிவித்துள்ளார்.

33 வயதான சினேடின் சிடான் இத்தாலியின் யுவன்டாஸ் கழகத்தில் விளையாடிக்கொண்டிருத்த போது 2001ஆம் ஆண்டு ஸ்பெயினின் றியல்மெற்றிக் கழகத்துடன் இணைந்து கொண்டார். இதற்காக 65மில்லியன் டொலர் பெறுமதியான ஒப்பந்தம் ஒன்றையும் அவர் செய்திருத்தார். இதன் படி உலகின் அதிகமானபணத் தொகைக்காக விளையாட்டு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்ட வீரராக சினேடி சிடான் கருதப்படுகின்றார்.

1998ஆம் ஆண்டு உலகப் கோப்பை கால்பந்தாட்டப் போட்டியில் சிறந்த கால் பந்தாட்ட வீரருக்கான விருது பெற்ற சிடான் மேலும் பல்வேறு சர்வதேச விருதுகளைப் பெற்ற வீரர் என்ற பெருமைக்குரியவர்.

உலகின் முன்னணி கால்பந்தாட்டப் போட்டிகள் அனைத்திலும் பங்குபற்றியுள்ள இவர் தனது அணியின் வெற்றிக்காக போட்டியின் போது கடுமையாக உழைப்பவராகவும் கருதப்படுகின்றார்.

(உ-68)

# சிறந்த கால்பந்தாட்ட அணியாக மீண்டும் பிரேசில்

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் அதன் உலகத்தரப்படுத்தல் பட்டியலை வெளியிட்டுள்ளது.

அதன்படி, 848 புள்ளிகளைப் பெற்றுள்ள பிரேசில் அணி தொடர்ந்தும் முன்னணி வகிப்பதுடன், பிரான்ஸ் அணி 824 புள்ளிகளைப் பெற்று 2ஆம் இடத்தினைப் பெற்றுள்ளது. ஸ்பெயின் 3ஆம் இடத்திற்கு வந்துள்ளதுடன் 5 ஆம் இடத்திலிருந்த நெதர்லாந்து அணி 4ஆம் இடத்திற்கு வந்துள்ளது.

4ஆம் இடத்திலிருந்த ஆர்ஜென்டினா 6வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. 11ஆம் இடத்திலிருந்த மெக்சிக்கோ அணி 5ஆம் இடத்தினைக் கைப்பற்றியிருக்கின்றது. துருக்கி, ஜேர்மனி, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய அணிகள் 7முதல் 10வது இடங்களை வகிக்கின்றன.

(உ-68)

# பிரதீப் குமாரவிற்கு விதிக்கப்பட்ட போட்டித்தடை நீக்கப்பட்டது

400 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஆசியா சம்பியனாகத் திகழும். இலங்கையின் றொகான் பிரதீப் குமாரவிற்கு விதிக்கப்பட்டிருந்த ஒரு வருடகால போட்டித் தடையினை நீக்குவதற்கு இலங்கை அமெசூர் மெய்வல்லுநா சங்கம் தீர்மானித்துளளது.

இந்த வகையில், எதிர்வரும் உலக மெய்வல்லுநர் போட்டிகளில 4x400மீற்றர் அஞ்சல் ஓட்டப்போட்டிகளில் கலந்துகொள்ள றொகான் பிரதீப் குமாரவிற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவிருப்பதாக இலங்கை அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தின் தலைவர் சுனில் ஜெயவீர தெரிவித்துள்ளார்.

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்திற்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்காது வெளிநாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டமைக்காகவே பிரதீப்குமாரவிற்கு ஒருவருடகால தடை விதிக்கப்பட்டிருந்தது.

இவர் அண்மையில் இலங்கையில் நடைபற்ற 81வது தேசிய மெய்வல்லுநர் போட்டிகளில் கலந்து கொள்ளவில்லை என்பது தெரிந்ததே.(உ-68)

# துடுப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நொதேன் விளையாட்டுக்கழகத்தின் 25வது ஆண்டு நிறைவையொட்டியும்,பரராஜசிங்கம் ஞாபகார்த்தமாகவும் செங்குந்தா விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்படும் ''பரா'' வெற்றிக்கிண்ணமாபெரும் துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு இந்திரா விளையாட்டுக் கழகம் எதிர்,ஞானவைரவர் விளையாட்டுக கழகமும் மு.ப.930 மணிக்கு நவாலி லெவின்ஸ்ரார் விளையாட்டுக்கழகம எதிர் நிலாந்தன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (உ-10)

# சர்வதேச ஒருநாள் போட்டித்தொடர்

அவுஸ்திரேலிய, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான சர்வதேச ஒருநாள் போட்டித்தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டித்தொடரில் அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளரான கிளைன் மெக்ராத் விளையாடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முழங்காலில் ஏற்பட்டுள்ள உபாதை காரணமாகவே இந்தப் போட்டித்தொடரில் இவர் கலந்து கொள்ளமாட்டார் என அவுஸ்திரேலிய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய மற்றும் பங்களாதேஷிற்கு இடையிலான முதல் இரு போட்டிகளும் இன்றும், நாளையும் கைன்சிலும் மூன்றாவதும் இறுதியுமான போட்டி எதிர்வரும் புதன்கிழமை டாவினிலும் இடம் பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-68)

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



## இன்று ஒரு தகவல்

# வாழ்க்கை நாடகம்

இந்த உலகம் ஒரு நாடகமேடை. அதில் நாம் எல்லோரும் நடிகர்கள் என்று பல பெரியவர்கள் கூறியிருக்கின்றனர். தற்போது உலகம் போகும் போக்கைப் பார்த்தால், அது நூற்றுக்கு நூறு உண்மை என்பது விளஙகுகின்றது. ஏனென்றால் இப்போது யாருமே உண்மையாக நடந்துகொள்வதாகத் தெரியவில்லை. எல்லோருமே ஏதோ ஒரு விதத்தில் நடித்துக்கொண்டிருக்கின்றனர். அதுவும் இந்த நாடகத்தில் வில்லன்கள்தான் அதிகம். ஆனால் அவர்களோ தங்களைக் கதாநாயகர்களாக நினைத்துக் கொண்டிருக்கின்றனர் அதுதான் பரிதாபம்.

இந்த உலகம் ஒரு நாடகமேடை என்று பெரியவர்கள் கூறியதற்கு அர்த்தம் வேறு. அது வேதாந்தம். வாழ்க்கை எனும் நாடகத்தில் நாம் தொடக்கம் முதல் முடிவுவரை ஒரே பாத்திரமாக இருப்பதில்லை. பலவிதமான பாத்திரங்களை ஏற்கவேண்டியுள்ளது. ஒரு நாடகத்தில் நடிக்கும்போது என்ன வேஷம் போடுகிறோமோ அதற்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்ள வேண்டும். ராஜா வேஷம் போட்டவன், சேவகன் மாதிரி நடந்துகொள்ளக்கூடாது. அதுபோல் வாழ்க்கையிலும் நாம் ஏற்ற பாத்திரத்துக்குத் தகுந்தமாதிரி நடந்து கொள்ளவேண்டும். இது தெரியாதபடியால் தான் பலர் நிம்மதியில்லாமல் சிரமப்படுகின்றனர்.

இப்போது நாம் வாழ்வில் வெவ்வேறு பாத்திரமாக மாறிக்கொண்டிருக்கின்றோம். உதாரணத்துக்கு ஒருவரைப் பார்போமே. காலையில் அலுவலகம் செல்லும்வரை அவர் ஒரு பெண்ணின் கணவர். பிள்ளைகளின் தந்தை . அலுவலகம் சென்றபின் அங்கு ஒரு உத்தியோகத்தர். கணவர், தந்தை என்ற வேஷங்கள் எல்லாம் கலைந்து உத்தியோகத்தர் எனும் பாத்திரம் ஏற்கிறார். அலுவலகம் சென்றபின் அங்கு உள்ளவர்களிடம் நான் உங்கள் அப்பா, தாததா என்று கூறிக்கொண்டிருக்கக் கூடாது. உத்தியோகத்தர் வேஷத்திலிருந்து கொண்டு அப்பா மாதிரி நடந்து கொள்ளக் கூடாது. " மகனே நான் தந்த கடிதம் டைப் செய்தாகிவிட்டதா ? என்று கேட்டால் போங்க அப்பா உங்களுக்கு வேறுவேலை இல்லை" என்று கூறிவிட்டுப் போய்விடுவார்கள். அதுமட்டுமில்லாமல் போவதற்கு முன் "படம் பார்க்கப் பணம் கொடுங்கள்" என்று கேட்டாலும் கேட்பார்கள். இவர் அப்பா மாதிரி நடந்து கொள்ளும் போது, அவர் மகன் மாதிரி நடந்து கொள்ளக்கூடாதா?

வாழ்வில் நாம் குழப்பம் அடையக்காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள். என்ன பாத்திரம் ஏற்றிருக்கின்றோமோ அதற்கு ஏற்றமாதிரி நடந்துகொள்ளாததுதான். அலுவலகம் விட்டு மாலை வீடுதிரும்பியவுடன் மீண்டும் கணவனாகவும் தந்தையாகவும் மாறிவிடவேண்டும். ஆனால் பலர் அப்படி மாறுவதில்லை. வீட்டிலும் உத்தியோகத்தர் போல் நடந்து கொண்டு வசமா வாங்கிக் கட்டிக்கொண்டு அவஸ்தைப்

## வாதிட எவரும் முன்வராத காரணத்தினால்

# இந்திய மீனவர்கள் மீதான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் உண்ணா விரதத்தினை மேற்கொண்டு வந்த இந்திய மீனவர்கள் நால்வர் நேற்று யாழ். உயர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது, இவர்கள சார்பில் வாதாட சட்டத்தரணிகள் யாரும் முன்வராத காரணத்தால் வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டுக் கடலில் அத்துமீறி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த மார்ச் மாதம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட தமிழக நாகபட்டின மாவட்டத்தைச் சேர்ந்த மா.சுந்தர், இ.ராசபானு, க.சிவானந்தன், அ.சந்திரன் ஆகிய நால்வரும் தம்மை விடுதலை செய்யக்கோரி கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் உண்ணாவிரதம் இருந்துவந்த நிலையில், நேற்றைய தினம் யாழ். உயர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப் பட்டனர்.

அவ்வேளை, இவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்ற காரணத்தால் இவர்களுக்காக வாதிட முடியாதென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சட்டத்தரணி ஏ.இ.ஏகநாதன் மறுப்புத் தெரிவித்திருந்த நிலையில், உயர் நீதிமன்ற நீதிபதி கே.பி.வரதராஜா இது விடயத்தில் யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவி திருமதி சாந்தா அபிமன்யுவிடம் தொடர்புகொண்டார்.

இவர்களுக்காக வாதிட ஏனைய யாழ். மாவட்ட சட்டத் தரணிகளும் மறுப்புத் தெரிவித்த நிலையில், கொழும்பு சட்ட உதவி மன்ற உதவி நாடப்பட்ட போது, அங்கிருந்தும் சாதகமாக பதில் கிடைக்காததால் இந்திய உயர் ஸ்தானிகராலயத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டது.

இதற்கு எதிர்வரும் 6ஆம் திகதி மேற்படி வழக்கில் வாதிட கொழும்பிலிருந்து சட்டத்தரணியை ஒழுங்கு செய்வதாக இந்திய உயாஸ்தானிகராலயம் அறிவித்ததை அடுத்து வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, சாட்சியமளிக்க வந்திருந்த கடற்படையினர் மற்றும் பொலிஸார் ஏழுபேரும் விசாரணை இடம்பெறாததால் திரும்பிச் சென்றனர்.

மேற்படி மீனவர் வசமிருந்து கைப்பற்றப்பட்ட வலைகள் உயர் நீதிமன்றத்திலும், படகுகள் ஊர்காவற்றுறைப் பொலிஸார் வசமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது இவ்விதம் இருக்க மேற்படி மீனவர்கள் நால்வரும் கடந்த 27ஆம் திகதி முதல் மேற்கொண்டு வந்த உண்ணாவிரதம் நேற்றுடன் முடிவிற்கு வந்ததாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.(உ-16,43)

## இராசி பலன்

**02.08. 2003**

**(ஆடி 17, சனி)**

சதுர்த்தி - மு.ப 8.53வரை

உத்தரம் - மு.இ 8.32வரை

இராகுகாலம் - 9.03 - 10.33

சுபநேரம் - 3.03 - 4.33

கருடபஞ்சமி

மேடம்

## வலிகாமம் வலயப் பாடசாலைகளில்

# அடிப்படைச் சுகாதார வசதிமேம்பாட்டுத் திட்டம்

(சுதுமலை)

வலிகாமம் கல்விவலய சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிமனையின் கீழுள்ள பாடசாலைகளில் அடைப்படை சுகாதார வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு புதிதாக குடிநீர் கிணறுகள், மலசல கூடங்கள் என்பனவற்றையும் தற்போது பாவிக்க முடியாத நிலையில் உள்ளவற்றை புனரமைப்பு செய்யவும் யுனிசெவ் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான ஆரம்பக் கலந்துரையாடலொன்று நாளை மறுதினம் பி.ப 2.00மணிக்கு வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி ரெஜினா இருதயநாதன் தலைமையில் வலிகாமம் கல்விப்பணிமனையில் இடம்பெறவுள்ளது.

யுனிசெவ் நிறுவன செயல்திட்ட உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொள்ளும் இக் கலந்துரையாடலில் சம்மந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், மற்றும் இப் பிரதேசத்திற்குட்பட்ட பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு தமது தேவைகளை எடுத்துரைக்குமாறும் வலயக்கல்விப் பணிப்பாளர் சம்மந்தப்பட்டவர்களுக்கு கடித மூலம் அறிவித்துள்ளார். (உ-252)

## ரைட்ஸ் நிறுவனத்திற்கு

# ரயில்வே திணைக்களத்தை

“மகனே நான் தந்த கடிதம் டைப் செய்...
கேட்டால் போங்க அப்பா உங்களுக்கு வேறுவேலை இல்லை” என்று கூறிவிட்டுப் போய்விடுவார்கள். அதுமட்டுமில்லாமல் போவதற்கு முன் “படம் பார்க்கப் பணம் கொடுங்கள்” என்று கேட்டாலும் கேட்பார்கள். இவர் அப்பா மாதிரி நடந்து கொள்ளும் போது, அவர் மகன் மாதிரி நடந்து கொள்ளக்கூடாதா?

வாழ்வில் நாம் குழப்பம் அடையக்காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள். என்ன பாத்திரம் ஏற்றிருக்கின்றோமோ அதற்கு ஏற்றமாதிரி நடந்துகொள்ளாததுதான். அலுவலகம் விட்டு மாலை வீடுதிரும்பியவுடன் மீண்டும் கணவனாகவும் தந்தையாகவும் மாறிவிடவேண்டும். ஆனால் பலர் அப்படி மாறுவதில்லை. வீட்டிலும் உத்தியோகத்தர் போல் நடந்து கொண்டு வசமா வாங்கிக் கட்டிக்கொண்டு அவஸ்தைப் படவேண்டியது. இதெல்லாம் எதனாலே? வேஷத்துக்குத் தகுந்த மாதிரி நடந்துகொள்ளத் தெரியாத காரணத்தினாலே. நீங்கள் ஒரு அலுவலக நிர்வாகியாக இருக்கின்றீர்கள். மாலை வீட்டிக்குச் செல்கின்றீர்கள். வீட்டில் உங்கள் மனைவி வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்கிவரச் சொன்னால் வாங்கிக்கொண்டு வந்து கொடுக்கவேண்டியது தானே. அதை விட்டு விட்டு “வாங்கவேண்டிய பொருட்களை டைப் செய்து ஃபைல் செய்து கொண்டு வா” என்று கூறினால் என்ன அர்த்தம்? வீடு திரும்பியவுடன் கணவராகவும், தந்தையாகவும் மாறாமல் இருப்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். வீட்டில் உள்ளவர்கள் மீது எரிந்து விழுவார்கள். இதனால் மனைவி, பிள்ளைகள் அருகில் வரவே பயப்படும் நிலைமை வரும். இது உங்களுக்கும் கஷடம், அவர்களுக்கும் கஷடம்.

உங்களது உண்மையான பாத்திரம் பிரமம் அல்லது ஆத்மா. உங்களுக்கு உடல் உள்ளது. மனம் உள்ளது ஆனால் நீங்கள் உடலோ மனமோ அல்ல. உங்களது பாத்திரத்துக்குத் தகுந்தமாதிரி நடந்து கொள்ள வேண்டுமென்றால் அதற்குப் பயிற்சி தேவை. பயிற்சிக்காலத்தில் பல கட்டுப்பாடுகள் இருக்கும்.

கார் ஓடுவதற்குக் கட்டுப்பாடுகள் இருக்கல்லவா, அதுபோன்று கார் ஓடப்பழகிய பின்பு நீங்கள் காரில் அமர்ந்திருக்க வேண்டுமென்றில்லை. எங்கு வேண்டுமென்றாலும் சுற்றலாம். அதேபோல் உங்கள் ஆன்மீகப் பயிற்சி முடிந்தவுடன் உலகக்காரியங்களில் பங்கேற்கலாம். அப்போது உலகம் உங்களுடன் ஒட்டாது.

பாத்திரத்துக்கு ஏற்றது போன்று நடிக்க வேண்டியதைப் பற்றி இதுவரை பேசிக்கொண்டிருந்தோம். காசுக்குத் தகுந்த மாதிரி நடிப்பதைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? “வில்லியம் கில்லெட்” என்று ஓர் அமெரிக்க நடிகர் சின்னவயதிலிருந்தே நாடகக் கம்பனிகளில் சேர்ந்து நடித்துக்கொண்டிருந்தார். ஒரு நாடகத்தில இவர் இறப்பது போன்று ஒரு காட்சியில் இவர் நடித்தார். நாடகக்குழு நிர்வாகிக்கு இவரது நடிப்பில் திருப்தியில்லை. “என்ன சார்! இறப்பது மாதிரி நடிக்க வேண்டிய நீங்கள் அந்த நேரத்தில் சிரிக்கின்றீர்களே சுத்த மோசம்” என்றார்.

அதற்கு அந்த நடிகர் கூறுகின்றார். நீங்கள் கொடுக்கும் சம்பளத்தைப் பார்த்தால் அதை வாங்கிப் பிழைப்பதைவிட இப்படி சிரித்துக்கொண்டு இறப்பது எவ்வளவோ மேல் இல்லையா? என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இராசி பலன்

**02.08. 2003**

**(ஆடி 17, சனி)**

சதுர்த்தி - மு.ப 8.53வரை
உத்தரம் - மு.இ 8.32வரை
இராகுகாலம் - 9.03 - 10.33
சுபநேரம் - 3.03 - 4.33

கருடபஞ்சமி

**மேடம்**
மனமகிழ்ச்சி, எடுத்தகருமங்கள் கைகூடும், செய்தொழில் விருத்தி, உடல் நலம்.

**இடபம்**
சொத்துக்களால் கவலை, நல்ல முயற்சி, காரிய இடையுறு, ரோக நிலை.

**மிதுனம்**
மாதர் நட்பு, தன்னம்பிக்கைக் குறைவு, தனவிரயம், எடுத்த காரியம் தாமதமாகும்.

**கடகம்**
மனோதைரியம், அன்னியர் சந்திப்பு, நற்கீர்த்தி, காரிய அனுகூலம்.

**சிங்கம்**
அதிக செலவு, மனோசங்கடம், போசனசுகக்குறைவு, காரிய தாமதம்.

**கன்னி**
அன்பளிப்பு, மனமகிழ்ச்சி, திடீர் பயணம், நல்லமுயற்சி.

**துலாம்**
உணர்ச்சிவசப்படல், தொழில் மந்த நிலை, பணக்குறைவு, சோம்பல்.

**விருச்சிகம்**
குடும்ப மகிழ்ச்சி, நண்பரின் வருகை, விருந்துபசாரம், முயற்சி கைகூடும்.

**தனுசு**
அதிக பிரயாசை, நன்கொடை, எடுத்த காரியம் கைகூடும், அதிகாரம்.

**மகரம்**
புதிய தொழில் சிந்தை, எதிர்பாராத செலவு, பிரயாணம், முயற்சி தாமதம்.

**கும்பம்**
அமைதிக்குறைவு, தொழில் நன்மை, உறவினர் மனஸ்தாபம், காரிய தாமதம்.

**மீனம்**
காரிய அனுகூலம், கலந்துரையாடல், பிறர் உதவி, தனலாபம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

...யில் உள்ளவற்றை புனரமைப்பு செய்யவும் யுனிசெவ் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான ஆரம்பக் கலந்துரையாடலொன்று நாளை மறுதினம் பி.ப 2.00மணிக்கு வலிகாமம் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு தமது தேவைகளை எடுத்துரைக்குமாறும் வலயக்கல்விப் பணிப்பாளர் சம்மந்தப்பட்டவர்களுக்கு கடித மூலம் அறிவித்துள்ளார். (உ-252)

### ரைட்ஸ் நிறுவனத்திற்கு

# ரயில்வே திணைக்களத்தை வழங்கும் தீர்மானம் இல்லை

**போக்குவரத்து அமைச்சின் செயலர் தெரிவிப்பு**

(கொழும்பு)

இந்திய அரசின் கீழ் உள்ள ரைட்ஸ் நிறுவனத்திற்கு ரயில்வே திணைக்களத்தை வழங்கும் எந்தவொரு தீர்மானமும் கிடையாது என போக்குவரத்தின் அமைச்சின் செயலாளர் தஹம் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

எனினும் நஷ்டத்தில் இயங்கும் ரயில்வே திணைக்களத்தை மீட்கும் நோக்குடன் இந்நிறுவனம் சில ஆய்வுகளை மேற்கொண்டு, அது தொடர்பாக அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளதுடன், ஆலோசனைகளையும் வழங்கியுள்ளது.

இதேவேளை ரயில்வே அதிகார சபையின் கீழ் ஊழியர்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப் படவுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

ரயில்வே திணைக்களத்தை அரசாங்கம் அதிகார சபையின் கீழ் கொண்டு வந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அண்மையில் ரயில்வே திணைக்களத்தின் 52தொழிற் சங்கங்களும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து,

ரயில்வே திணைக்களத்தை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு அரசு விற்பனை செய்ய முயற்சி செய்து வருவதாக எதிர்க்கட்சிகள் சில குற்றம்சாட்டி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (தி)

# வடக்கு-கிழக்கு மாகாண கைத்தொழில் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண தொழிற்றுறை திணைக்களம் வருடா வருடம் மாகாண மட்டத்திலான கைத்தொழில் கண்காட்சியை நடாத்தி வருகிறது. அந்தவகையில் 2003ஆம் ஆண்டுக்கான மேற்படி கண்காட்சி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 27,28,29ம் திகதிகளில் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எமது பிரதேசத்தில் உள்ள சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்குமுகமாகவே நடாத்தப்படும் இக் கண்காட்சியில் பங்கு கொண்டு தங்கள் உற்பத்திப் பொருட்களைக் கண்காட்சிப்படுத்த விரும்பும தொழில் முயற்சியாளர்கள் யாழ்ப்பாணம் கச்சேரியில் இயங்கும் தொழிற்றுறை திணைக்கள மாவட்ட அலுவலகத்தில் இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி இம்மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (உ)

## தண்டப் பணமின்றி கடவுச்சீட்டு

(கொழும்பு)

தென்னிலங்கையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த் தங்களின் போது கடவுச்சீட்டுக்களை இழந்தவர்கள் எதுவித தண்டப் பணமும் இன்றி கடவுச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

குடிவரவு, குடியகல்வுத் திணைகளப் பிரதிக் கட்டுபாட்டாளர் ஜெகத விஜயவீர இவ்வாறு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கடவுச் சீட்டுக்களை தொலைத்தவர்களிடம் இருந்து அறவிடப்படும் 10ஆயிரம் ரூபா காசுத் தொகை இவர்களிடம அறவிடப்படமாட்டாதெனவும தெரிவித்துள்ளார். (தி)

# லைபீரியத் தலைநகரில் சண்டை ஓய்ந்தது செஞ்சிலுவை நிவாரணம் வந்து சேர்ந்தது

## அமைதிப் படைகளைக் கண்டு மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம்

(மன்ரோவியா)

**லைபீரியாவுக்குள் அமைதி காக்கும் படைகள் வந்து சேரத் தொடங்கியதையடுத்து அங்கு அமைதி குடிகொள்ள ஆரம்பித்துள்ளது.**

**மக்கள் ஆறுதல் மூச்சு விடுகிறார்கள். துப்பாக்கிச்சத்தங்கள் ஓய்ந்துள்ளன. மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து அமைதிப் படைகளை வரவேற்றுள்ளனர்.**

ஆரம்பத்தில் ஆயிரத்து 500 அமைதிப் படையினர் லைபீரியாவிற்குள் வந்து சேர்வர் என்று படிப்படியாக மொத்தம் 3ஆயிரத்து 250 படையினர் அடுத்த திங்களுக்குள் லைபீரியாவிற்குள் நிலைகொள்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைதிப் படைகள் நிலைகொள்வதற்கான தள நிலைமைகளை ஆராய்வதற்காக இராணுவ நிபுணர்கள் வந்தவுடனேயே தலைநகரில் சண்டை ஓய்ந்தது. நகரவாசிகள் தெருக்களில் இறங்கி 'எமக்கு சண்டை வேண்டாம். எமக்கு அமைதியே வேண்டும்' என்று கோஷமிட்டார்கள். லைபீரியாவிற்கு சமாதானப் படைகளை அனுப்புவதற்கு மேற்காபிரிக்க நாடுகளின் தலைவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள்.

இதனால் லைபீரிய ஜனாதிபதி சார்ள்ஸ் ரெய்லர் எதிர்வரும் திங்கள் கிழமைக்குள் அந்த நாட்டை விட்டு வெளியேறலாம் என்று மேற்காபிரிக்க நாடுகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மேலும், லைபீரியாவிற்கு சமாதானப் படைகள் வந்த வண்ணம் இருப்பதாகவும் எதிர்வரும் திங்கட் கிழமைக்குள் சகல படையினரும் யுத்தம் இடம்பெறும் பகுதிகளுக்கு முழுமையாக சென்று விடுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை லைபீரியாவில் நிலைகொண்டுள்ள சமாதானப் படையினர் பல பிரதேசங்களில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருவதாக ரொய்ட்டர் செய்தி தெரிவிக்கின்றது.

சமாதானப்படை முழுமையாக லைபீரியாவிற்குள் சேர்ந்ததும் தற்போதைய ஜனாதிபதி சார்ள்ஸ் ரெய்லர் அந்த நாட்டிலிருந்து வெளியேறுவார்.

கடந்த இரண்டு வருடங்களாக நடைபெற்றுவருகின்ற உக்கிர போருக்கு இது ஒரு முடிவாக அமையும் என்று ரொய்ட்டர் செய்தி மேலும் கூறுகின்றது.

லைபீரியாவை விட்டு வெளியேறுவதற்கு ஜனாதிபதி ரெய்லர் ஏற்கனவே ஒத்துக் கொண்டுள்ளார். லைபீரியா அவருக்கு புகலிடம் அளிக்க முன்வந்ததை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

லைபீரியாவின் பெரும் பகுதியும் புரட்சிக் குழுக்கள் வசம் இருக்கின்றது. புரட்சிக் குழுக்களுக்கிடையிலும் முரண்பாடு கடும் மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

லைபீரியாவில் அமைதியை ஏற்படுத்தும் கடமை அமெரிக்காவுக்கு உண்டென்று அவதானிகள் கூறுகிறார்கள். அமெரிக்காவிலிருந்து கறுப்பு இன அடிமைகளைக் குடியேற்றுவதற்காக மேற்கு ஆபிரிக்காவால் லைபீரிய நாடு 1947ல் உருவாக்கப்பட்டது.

**செஞ்சிலுவை விமானம் வந்தது**

மன்ரோவிய மக்களுக்கு மகிழ்ச்சி தரும் விதத்தில் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் விமானம் ஒன்று மருத்துவப் பொருட்களுடன் வந்து இறங்கியது. தண்ணீர் டிரக் ஒன்றும் வந்திறங்கியது.

அதிபர் சார்ள்ஸ் ரெய்லர் நாட்டை விட்டு வெளியேறும்படி வற்புறுத்துவதற்காக திங்கட்கிழமை பிரதிநிதிகள் குழுவொன்று அனுப்பி வைக்கப்படவிருப்பதாக மேற்காபிரிக்க தலைவர்கள் அறிவித்துள்ளனர். அமைதிப் படைகள் வந்தவுடன் தாம் வெளியேறுவதாக ரெய்லர் ஏற்கனவே கூறியுள்ளார். மேலும் போர்க் குற்றங்களுக்கான விசாரணை ஒன்றையும் சியராலியோனில் அவர் எதிர்நோக்குகிறார். (பி-9)

## பாகிஸ்தான் சிறுமி பாத்திமா குணமாகி தாயகம் திரும்பினாள்

(புதுடில்லி)

பாகிஸ்தானிலிருந்து இந்தியாவில் பங்களூரில் இதய அறுவை சிகிச்சை செய்துகொண்ட இரண்டரை வயது சிறுமி நூர் பாத்திமா தனது பெற்றாருடன் தாயகம் புறப்பட்டார்.

இதயத்தில் இரண்டு ஓட்டைகளை அறுவைச் சிகிச்சை மூலம் சரிசெய்துகொண்டபின்னர் பாத்திமா பிரயாணம் செய்யும் அளவிற்கு குணமாகிவிட்டதால் டாக்டர்கள் அவளை ஆஸ்பத்திரியில் இருந்து விடுவித்தனர்.

இந்தச் சிறுமியின் வருகை இந்திய மக்கள் மத்தியில் புதியதொரு உணர்வினை தோற்றுவித்தது. ஆயிரக் கணக்கான இந்தியர்கள் இவளது



சுகத்திற்காக பிரார்த்தனை செய்தனர். பெருமளவில் பணமும் வழங்கினர். அப்பணம் முழுவதும் இனி சிகிச்சைக்காக வரவிருக்கும் பாகிஸ்தானிய இருதயக் கோளாறுடைய பிள்ளை களின் சிகிச்சைக்கென வைப்பிலிடப்பட்டுள்ளது.

சிறுமியின் தந்தை நபீன் சஜாத் தன்னுடைய மகளுக்கு இந்திய மக்கள் அளித்த உயிர் காக்கும் உதவிகள் இரண்டு தேச மக்களினது நட்புறவிற்கான அடையாளம் என்றும் தன் மகள் இந்தியப் பாகிஸ்தான் மக்களின் நட்புறவின் அடித்தளமாகிறாள் என்றும் கூறியிருக்கிறார்.

இதனை இரண்டு அரசாங்கங்களும் உணரவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். (பி-9)

## அமெ. கடற்படைத் தளபதி இந்தியாவுக்கு விஜயம்

(புதுடில்லி)

ஈராக்கிற்கு இந்தியப் படையினரை அனுப்புமாறு கோருவதற்காக தான் புதுடில்லி வரவில்லை என்று அமெரிக்கக் கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ரிச்சாத்மஹோ தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் தற்போது நிலவும் சூழ்நிலை குறித்து இந்திய அதிகாரிகளோடு ஆராய்வதற்கே இந்தியா வந்திருப்பதாக குறிப்பிட்ட அவர், ஏற்கனவே ஈராக்குக்கு 19 நாடுகள் தமது படைகளை அனுப்பி வைத்திருப்பதாகவும், 15 நாடுகள் தமது படைகளை அனுப்புவதற்கு இணங்கியிருப்பதாகவும் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையின் புதிய தீர்மானம் குறித்து அமெரிக்கா ஆலோசித்து வருவதாகவும், ஈராக்கிற்கு படைகளை அனுப்புவது குறித்து அந்தந்த நாடுகள் தமது விருப்பத்தைத் தெரிவிக்கலாம் என்றும் ஈராக்கில் உயர்வு நிலையைக் கொண்டுவருவதற்காக இந்தியா 15 ஆயிரம் படையினரை அனுப்பலாம் என்று அமெரிக்கா வெளிப்படையாகவே விருப்பம் தெரிவித்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புதுடில்லியில் இந்தியப் படைத்துறை ஆலோசகர் பர்வேஸ் மிஷ்ராவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியுள்ளார்.

அதேவேளை, முப்படைகளின் தளபதி மாவேஇம்ஷாஸின் இராணுவத் தளபதி எம்.ஜே.விஜேய் உட்பட பலமுக்கிய அதிகாரிகளையும் சந்தித்துப் பேசியுள்ளார். (பி-9)




## பிரான்ஸில் காட்டுத்தீயை பரப்பிய சூத்திரதாரி கைது

(பரிஸ்)

பிரான்ஸில் கடந்த செவ்வாய்க் கிழமை முதல் தீவிரமாகப் பரவியருந்த காட்டுத்தீயின் சூத்திரதாரியை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இந்தக் காட்டுத்தீயில் சிக்கி 4 பேர் உயிரிழந்திருப்பதோடு ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்திருக்கின்றனர்.

பிரான்ஸின் சைன்மெக்ஸ்மே பகுதியில் பரவியிருந்த காட்டுத்தீ 24 மணித்தியாலங்களுக்குள் தீயணைப்புப் படை வீரர்களால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக பிரான்ஸ் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சுமார் 30 வெவ்வேறு தீ வைப்புச் சம்பவங்களிலேயே இந்தப் பகுதியில் தீ மிக வேகமாக பரவியதாக கூறப்படுகின்றது.

தீ கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டதாக பிரான்ஸ் பொலிஸார் தெரிவித்த போதிலும் இன்னும் சில இடங்கள் தீ பற்றி எரிவதனால் கட்டுப்படுத்தப்பட்ட இடங்களுக்கும் தீ பரவக்கூடிய அபாயம் இருப்பதாக தீயணைப்புப் படை வீரர்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 30 வருடங்களுக்கு மேலாக தாம் வாழ்ந்து வந்த வீடுகள் 20 நிமிடங்களுக்கும் குறைவான காலப் பகுதியில் தீக்கிரையானதாக காட்டுத்தீயினால் பாதிக்கப்பட்ட பிரதேசவாசியொருவர் கவலை தெரிவித்துள்ளார்.

தீயில் 20 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமான நிலப்பரப்பு கருகியிருப்பதாகவும், தீயணைக்கும் பணிகளில் தற்போது ஆயிரத்து 700 படை வீரர்கள் வரையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (பி-9)

## சீனா ஏவுகணை தயாரிப்பு; அமெரிக்காவின் கவலை

(வாஷிங்டன்)

சீனா ஏவுகணைத் தயாரிப்புக்களை அதக அளவில் மேற்கொள்வதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

சீனாவின் இந்த நடவடிக்கை தாய்வானிற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

தாய்வானுடன் அமெரிக்கா மேற்கொண்டுள்ள நல்லுறவு ஒப்பந்தத்திற்கு அமைய தாங்கள் இந்தக் கருத்துக்களைக் கூறுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. (பி-9)

## சதாமின் புதல்விகளுக்கு ஜோர்தானில் புகலிடம

(அம்மான்)

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம்ஹுசைனின் இரண்டு புதல்விகளுக்கு மனிதாபிமான ரீதியில் புகலிடம் வழங்குவதற்கு ஜோர்தான் அரசு தீர்மானித்துள்ளது.

சதாமின் புதல்விகளான றாக்ற் மற்றும் றானா ஆகியோர் ஜோர்தான் தலைநகர் அம்மானில் தற்போது தங்கியிருப்பதாக டுபாயிலுள்ள அல்அரேபிய தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

அவரது புதல்விகளோடு அவர்களுக்குப் பிறந்த 9 குழந்தைகளுக்கும் ஜோர்தானில் புகலிடம் வழங்கப்பட்டுள்ளதாக ஜோர்தான் அரசு தெரிவித்துள்ளது. (பி-9)



மும்பையில் ஜோகேஸ்வரி என்ற பகுதியில் குண்டுகள் வெடித்ததில் 7 பேர் உயிரிழந்ததுடன் 26 பேர் காயமடைந்தனர். இதனால் சேதமடைந்த வீடுகளைப் படத்தில் காணலாம்.

## ஒரிஸாவில் நிலக்கண்ணி வெடிக்கு பொலிஸார் 10 பேர் பலி

(புதுடில்லி)

இந்தியாவின் ஒரிஸா மாநிலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலக்கண்ணிவெடி சம்பவத்தில் 10 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

பாதுகாப்பு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸாரே இவ்வாறு கொல்லப்பட்டனர்.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு இதுவரை எந்த இயக்கமும் உரிமை கோரவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் மேலும் பல பொலிஸார் காயமடைந்துள்ளனர்.(பி-9)

## கர்நாடக வெடிவிபத்தில் 7பேர் பலி

(சென்னை)

கர்நாடக மாநிலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெடிவிபத்தில் 7 பேர் பலியானதுடன், 9 பேர் காயமடைந்துள்ளனர்.

கர்நாடக மாநில பத்ராவதி நகரின் விஸ்னேஸ்வரையா எக்காலையிலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. (பி-2)

## ஆப்கானில் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரிக்கலாம்

### அமெ. புலனாய்வுத்துறை எச்சரிக்கை

(வாஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரிக்கலாமென்று அமெரிக்க மத்திய புலனாய்வு பிரிவு எச்சரித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் அமைதி காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அமெரிக்க இராணுவத்தினர் மீது அடிக்கடி தீவிரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த மாதம் மட்டும் இடம்பெற்ற தாக்குதல்களில் 9 அமெரிக்க இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானிலுள்ள அமைதி காக்கும் படையில் 12 ஆயிரத்து 500 அமெரிக்கத் துருப்பினர் உள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (பி-9)

*இறை காக்கும் வையக மெல்லாம் அவனை முறைகாக்கும் முட்டாச் செயின்* – குறள்

வலம்புரி

## பிரதமர் ரணில் தமிழருக்கும் வழங்குவாரா?

உடத்தலவின்னவில் படுகொலை செய்யப்பட்ட பத்து முஸ்லிம் இளைஞர்களின் குடும்பங்களுக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இலவசமாகக் குடியிருப்புக் காணிகளை வழங்கியுள்ளார்.

பிரதமரின் அலரிமாளிகையில் இடம் பெற்ற ஓர் சாதாரண நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நேரடியாகக் காணிகளுக்கான உரிமத்தை வழங்கியிருந்தார்.2001-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் காலத்தில் உடத்தலவின்னவில் பத்து முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இப் படுகொலையை பொது ஜன ஐக்கிய முன்னணியின் அப் போதைய ஆட்சியில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்தையும், அவரது இரு புதல்வர்களுமே செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு அதற்கான நீதிமன்ற விசாரணைகளும் இடம் பெற்று வருகின்றது.

இந் நிலையில் கொலையுண்ட முஸ்லிம் இளைஞர்களின் குடும்பங்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா குடியிருப்புக் காணிகளை வழங்கியுள்ளமை பாராட்டுதற்குரியது. அதாவது அவரது நடவடிக்கை ஒரு நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் பிரதமர் என்ற வகையில் சாலவும் பொருத்தமுடையதென்பதில் இருவேறு கருத்துக்கிடமில்லை.

ஆனால், கொலை செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர்களின் குடும்பங்களுக்கு குடியிருப்புக் காணிகளை வழங்கியது போல் பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் அரச படைகளால் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட தமிழ்க் குடும்பங்களுக்கும் இவ்வாறு குடியிருப்புக்கான காணிகளை வழங்குவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா முன்வராதது வேதனைக்குரியது.

ஒரு நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர் எல்லா இன மக்களையும் சம கண் கொண்டு நோக்குவது அவசியமாகும். அது நல்லாட்சிக்குரிய பண்பாகவும் இருக்கும்.

எனினும் அரச படைகளால் கொலை செய்யப்பட்ட-கைது செய்யப்பட்டு காணாமல் போன ஏழைத் தமிழ்க் குடும்பங்களுக்கு ஒரு சிறு துண்டுக் காணியைத் தானும் பிரதமர் ரணில் வழங்கமுன்வராதது துன்பகரமானதோர் நிகழ்வாகும்.

அரச படைகளால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்களின் குடும்பங்கள் கண்ணீரும் கம்பலையுமாய் பிரதமரைச் சந்தித்துத் தமது இழப்பைக் கூறியபோது கூட அந்த ஏழைக் குடும்பங்கள் மீது பிரதமருக்கு இரக்கம் ஏற்படாமல் போனதும், ஒரு சிறு துண்டுக் காணியையாவது அவர்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும் என்ற மன நிலை இல்லாமல் போனதும் அவரிடம் இருந்த இனவாதத்தின் வெளிப்பாடா என்று கூட எண்ணத் தோன்றுகின்றது.

# எமது மக்கள் துன்பப்படுவதைப் பொறுத்துக்கொள்ள மாட்டோம்

## யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்

(யாழ்ப்பாணம்)

எத்தனை பேரிழப்புகளையும் தாங்கிக்கொள்ளும் மனப்பக்குவம் கொண்ட நாம் எம் மக்களின் வாழ்வைப் பாதிக்கக்கூடிய எந்தவொரு செயற்பாட்டையும் பார்த்துப் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டோம் என யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெற்ற யாழ். குடாநாட்டு மீனவர் எதிர்நோக்கும் தொழில் ரீதியான நெருக்குவாரங்கள் தொடர்பான கலந்துரையாடலிலேயே இளம்பரிதி இதனைத் தெரிவித்தார்.

வடமாகாண கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் இ.தவரட்ணம் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட கடற்புலிப பொறுப்பாளர் இனியவன், கடற்புலிப் பெண் பிரமுகர் கல்யாணி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இளம்பரிதி அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எம் போராட்ட வரலாற்றில் மக்களே எந்தவொரு தீர்மானத்தையும் எடுப்பவர்களாகவும், பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

1999 ஆம் ஆண்டு இலங்கை ஒரு தனிச் சிங்கள பௌத்த பூமி எனக்கொண்டு வன்னியை நோக்கி சந்திரிகா அரசாங்கம் படையெடுத்த போது, அங்கு மக்களாகத் திரண்டு அரசு எந்த மக்களை அழிப்பதற்குப் படையை அனுப்பியதோ, அந்த மக்களே சரியான பாடம் புகட்டினர்.

தொடர்ச்சியான அந்நியப்படையெடுப்புக்களால் தம் சொத்து, சுகங்களை இழந்து வெளியேறிய மக்கள் தாம் வெல்லவேண்டும் என்ற உணர்வோடு போராடினார்கள்.

இப்படி மக்களால் மக்களுக்காக செய்யப்படும் போராட்டமும் அதன்பால் உள்ள தியாகங்களும் மக்களுக்கு ஒரு ஆபத்து நேரும் வேளையில் பொறுத்துக்கொண்டிருக்கக் கூடியதல்ல.

நாம் அரசியல்வாதிகளோ இராணுவ அதிகாரிகளோ அல்ல, மக்களின் எதிர்கால அரசியல் சுபீட்சத்துக்காகப் போராடும் ஓர்அமைப்பு. எனவே, நாம் மக்களுக்கான அச்சுறுத்தல்களைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது.

மக்களின் சமகால வாழ்வியல் பிரச்சினைகளுக்கு விரைந்து ஓர் தீர்வுகாண முயலவேண்டும். இதற்கான தீர்வைக்காண மக்களே முயலவேண்டும். இந்த ஒப்பந்தம் இன்னும் எமக்கு இயல்பு வாழ்வைத் தரவில்லை என்றகுரலை மக்களே வெளிப்படுத்த முன்வர வேண்டும் எனத் தெரிவித்தார்.

(உ-4)

# தண்டப்பண அறவீட்டுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

பொலிஸாரின் தவறான தண்டப்பண அறவீடுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் எச்சரித்துள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் சட்டத்துக்கு அமைய மாகாணங்களுக்கிடையே பஸ் சேவையை நடத்துவோருக்கு எதிராகவே தண்டனைகளையும் தண்டப் பணத்தையும் அறவிடமுடியும்.

ஆனால், அவ்வாறு இல்லாத பஸ் சேவைகளுக்கும் தண்டப்பணம் அறவிடப்படுவதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

ஒரே மாகாணத்துக்குள் சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு தண்டப்பணம் விதிக்கப்படவேண்டுமானால், அதற்காக மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தை விதிக்க வேண்டும்.

மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டத்தின்மூலம் விதிக்கப்படும் அபராதத் தொகையைவிட தேசிய போககுவரத்து ஆணைக்குழு சட்டத்தின்மூலம் விதிக்கப்படும் தொகை அதிகம் என அவர் மேலும், தெரிவித்துள்ளார்.

(தி)

# ரத்வத்தவின் புதல்வரே தன்னை சுட்டதாக மாலிக் கூறினார்

## மாவட்ட வைத்திய அதிகாரி சாட்சியம்

(கொழும்பு)

கண்டி வைத்தியசாலையில் அப்துல் மாலிக் என்பவரைப் பரிசோதனை செய்தபோது உடத்தலவின்னவில் லோகான் ரத்வத்தையும், சானுக ரத்வத்தையும் தன்னைத் துப்பாக்கியால் சுட்டதாக என்னிடம் தெரிவித்ததற்கு இவ்வாறு கடந்த புதனன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற உடத்தலவின்ன படுகொலை தொடர்பான வழக்கு விசாரணையில் மாவட்ட வைத்திய அதிகாரி டீ.ஆர்.டபிள்யூ பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது,

அஹமத் மாலிக் என்பவரைக் கண்டி வைத்தியசாலையில் பரிசோதனை செய்தேன். அவரது இடது தோளில் 1.5 சென்ரிமீற்றர் நீளமும், 2.5 சென்ரிமீற்றர் அகலமும் கொண்ட காயமொன்று இருந்தது. காயத்தில் எரிகாயத்திற்குரிய அடையாளம் எதுவும் காணப்படவில்லை. வலது காலில் காயம் ஒன்று காணப்பட்டது. இவ்வாறு வைத்திய அதிகாரி சாட்சியம் அளித்துள்ளார்.

இதேவேளை, பொய்ச்சாட்சியம் அளித்தவரான முதியான் சலாகே ஜயசூரிய என்பவருக்கு பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (த)

# இளவயதுத் தாய்மாரின் எண்ணிக்கை என்றுமில்லாத அளவுக்கு உயர்வு

(கிளிநொச்சி)

இலங்கையில் ஏற்பட்ட 20 வருட போர் காரணமாக இளவயதுத் தாயமாரின தொகை அதிகரித்துக் காணப்படுவதாகப் புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, வன்னிப்பகுதியில் மட்டும் 13 வயதிலிருந்து 15 வயதிற்குட்பட்ட சுமார் 12 ஆயிரம் தாய்மார்கள் உள்ளனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவர்களில் பெருமளவானோர் ஸ்ரீ லங்கா அரச படைகளின் ஆக்கிரமிப்பில் உள்ள வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருக்கும் அகதி முகாம்களில் உள்ளதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

நாட்டில போரினால் இடம்பெயர்ந்து சென்ற மக்களை தங்கவைப்பதற்காக அரசினால் அமைக்கப்பட்ட நலன்புரி முகாம்களில் தமிழ் மக்கள் குடியேறிய பின்னர் அங்கு நிகழ்ந்த வயது குறைந்தவர்களுக்கிடையேயான திருமண உறவுகளே இளவயதுத தாய்மாரின் எண்ணிக்கை இவ்வாறு அதிகரித்திருப்பதற்கான காரணம் எனவும் புள்ளி விபரங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, அரச படைகளின் ஆக்கிரமிப்பில் இருக்கும் ஏனைய மாவட்டங்களான மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் இளவயதுத் தாய்மார்களின் தொகை அதிகரித்துக் காணப்படுவதாக அம் மாவட்டங்களில் உள்ள மருத்துவமனைப் புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-8)

## குற்றச் செயல்கள் குறைய

# பொலிஸாரின் மனோநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும்

(கொழும்பு)

பொலிஸாரிடையே ஏற்பட்டுள்ள விரக்தி நிலையே நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கு காரணம் என நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரிப்பது தொடர்பாக ஆராயவென பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால நியமிக்கப்பட்ட குழு, பொலிஸ் ஆணைக்குழுவுக்கு வழங்கிய சிபார்சில் தெரிவித்துள்ளது.

பொலிஸ் திணைக்களத்தின் கீழ் மட்டம் முதல் உயர் மட்டம் வரையில் உள்ள 250 பேருக்கு விரைவில் பதவி உயர்வுகள் வழங்கப்படவேண்டும் எனவும் அக்குழு சிபார்சு செய்துள்ளது. (உ)

# 1600 ஈழ அகதிகள் நாடு திரும்ப விருப்பம்

(கொழும்பு)

இந்தியாவில் தற்போது தங்கியுள்ள 65 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளில் 1600 பேர் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாக அகதிகளுக்கான ஐ.நா. அமைப்பாகிய யு.என்.எச்.சி.ஆர். கூறியுள்ளது.

இவர்களில் எதிர்வரும் 8ஆம் திகதிக்குள் சுமார் 40 குடும்பங்களைச் சேர்ந்த 150 பேர் தாயகம் திரும்பவுள்ளனர் என யு.என்.எச்.சி. ஆர். இன் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், அரசிற்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர் இதுவரையில் 700 பேர் தமது நாடு திரும்பியுள்ளார்கள் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

(உ-8)

ॐ

## தினசரி தியானம்

### விரிவான வளர்ச்சி

மதப்பற்று இல்லாதவரும்கூட இறைவனை அடைய முடியும். நீண்டகாலம் கடினமான வழியில் பல்வேறு அனுபவங்களைப் பெற்ற பிறகே இது அவருக்குக் கிடைக்கும். மதப்பற்றுடையவரோ வேகமாக இப்பிறவியிலேயே இறைவனை அடைந்து பேரின்ப நிலை எய்துவார். எவ்வளவு விரைவாக இறைவனிடம் பற்றுக்கொள்கிறீர்களோ, அவ்வளவு விரைவாகப் பேரின்ப ஊற்றைப் பெறுவீர்கள்.

சுவாமி சிவானந்தர்

# பயணிகள் மீதான படையினரின் கெடுபிடிகள் மீண்டும் அதிகரிப்பு

(கிளிநொச்சி)

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் இருந்து கொழும்பு செல்லும் பயணிகள் மீதான வீதிச் சோதனைக் கெடுபிடிகளை படையினர் மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் அம்பாறை, கொழும்பு சாலைகளில் இருந்து அகற்றப்பட்ட படையினரின் சோதனைச் சாவடிகள் மீண்டும் அமைக்கப்பட்டிருப்பதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை, மகா ஓயா, தலாவ ஆகிய இடங்களிலேயே வீதிச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன எனவும், இவற்றினால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருவதாகவும் கூறப்படுகின்றது.

இரவு வேளைகளிலும் பொது மக்களின் வாகனங்கள் படையினரால் தடுத்து நிறுத்தப்படுவதுடன் அவர்களின் அடையாள அட்டை இலக்கம், வாகன இலக்கங்களைப் பதியும் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (உ-8)

# காவல் துறை நிலையங்கள் மட்டக்களப்பில் திறக்கப்படும்

(வவுனியா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் புதிதாக இரண்டு தமிழீழ காவல் துறை நிலையங்கள் திறக் கப்படவுள்ளன.

கரடியனாறு மற்றும் வாகரைப் பிரதேசங்களிலேயே இந்த காவல் துறை நிலையங்கள் திறக்கப்படவு ள்ளன.

மேறபடி காவல துறை பணிய கத்தில் பணிபுரிவதற்காக வன்னிப் பகுதியில் இருந்து 24 காவல் துறை உறுப்பினர்கள் மட்டக்களப்புக்கு செல்லவுள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே தமிழீழ காவல் துறையின் பணிகள் இடம் பெற்றுவருகின்றமையும் குறிப்பிடத் தக்கது. (த)


கலாசூரி,கலாபூசணம், நாதஸ்வர வித்துவான்

**அமரர் N.K. பத்மநாதன் அவர்களின்**

“திரு உருவப்பட திரை நீக்கமும்
ஆத்மசாந்திப்பிரார்த்தனை உரைகளும.”

இடம் : நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீன கலாசார மண்டபம்

காலம் : 02.08.2003 (சனிக்கிழமை)

நேரம் : மாலை 4 மணி (புதிய நேரம்)

**நிகழ்வுகள்**

திரு உருவப்பட திரை நீக்கம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்
(நல்லை ஆதீன முதல்வர்)

வரவேற்புரை: திரு.எஸ்.குணராஜா அவர்கள்

தலைமை உரை – “செஞ்சொற்செல்வன் ஆறு திருமுருகன் அவர்கள்.

பிரார்த்தனை உரைகள்
நல்லை ஆதீன முதல்வர் அவர்கள்.
அருட்கவி சி.விநாசித்தம்பி அவர்கள்

ஆத்மசாந்தி உரைகள்
திரு.எஸ்.பத்மநாதன் அவர்கள்.
(யாழ்.மாவட்ட அரச அதிபர்)
பேராசிரியர் சு.மோகனதாஸ் அவர்கள்
(துணைவேந்தர் யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.ப.விக்னேஸ்வரன் அவர்கள்.
(யாழ். கல்வி வலய கல்விப் பணிப்பாளர்)

இ.த.விக்னராஜா அவர்கள்
(மாவட்ட நீதிபதி யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள்.
(கலைப்பீடாதிபதி யாழ்.பல்கலைக்கழகம்)

திரு.எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் அவர்கள்
(ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி)

செல்வி புஸ்பா செல்வநாயகம் அவர்கள்
(இளைப்பாறிய ஆசிரியை)

நாதஸ்வர வித்துவான்
கலாபுஷணம் என்.ஆர். [illegible]


# வியாசனின் உலைக்களம் நேற்று வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதிய “வியாசனின் உலைக்களம்” எனும் கவிதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நேற்று மாலை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழ தேசிய கொடியினை தமிழீழ விளை யாட்டுதுறைப் பொறுப்பாளர் பாப்பா ஏற்றி வைத்தார் பொதுச் சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றிவைத்தார் சிறப்புரையை புலிகளின் பிரமுகர் பாலகுமாரனும் நூல் வெளியீட் டுரையை “வெளிச்சம்”ஆசிரியர் கருணாகரனும் நிகழ்த்தினர்

தமிழழ அரசியல் துறை துணைப் பொறு ப்பாளர் சோ.தங்கன் நூலை வெளியிட்டு வைத்தார்

மதிப்பீட்டுரையை பேராசிரியர் சண்முகதாஸ்,எழுத்தார் சாந்தன், அரசியல் விமர்சகர் மு.திருநாவுக் கரசு ஆகியோர் நிகழ்த்தினர்.

இந் நிகழ்வில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். (த)

## தமிழ்ச்செல்வனை....

சொந்தமான உலங்குவானூர்தி குறிப்பிட்ட நேரத்தில் இருந்து 6 மணித்தியாலங்கள் தாமதமாக பிற் பகல் 3.30மணிக்கே மட்டக்களப்பி ற்கு வந்தது.

இத் தாமதத்தினால் தமிழ்ச்செல் வனை வழியனுப்பக் காத்திருந்த வர்களும் திருமலையில் வரவேற்கக் காத்திருந்தவர்களும் பெரும் பரபரப் பும் விசனமும் அடைந்தனர்.

இதேவேளை மட்டக்களப்பில், அரசியல் துறைப் பொறுப்பாளரை மட்டு அம்பாறை விஷேட தளபதி கருணா அம்மான்,தளபதி கௌசல் யன் மற்றும் போராளிகள் பொது மக்கள் ஆகியோர் கையசைத்து வழியனுப்பி வைக்க திருமலையில் கேணல் பதுமன், திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக், தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் செயலாளரும் பாராளு மன்ற உறுப்பினருமான இரா.சம் பந்தன் மற்றும் பொது மக்களும் வரவேற்றனர். (இ)

## புலிகளுடன்....

லெப்.செல்லக்கிளியின் நினைவு தூபி திறப்பு விழாவின் போது இரா ணுவத்தினரால் ஆயுதமுனையில் பிரஸ்தாப தூபி தகரங்கள் கொண்டு மறைக்கப்பட்டமை.

மற்றும் வடமராட்சி கிழக்கு பொற்பதி கிராமத்தில் இராணு வத்தினரால் புதிதாக காவலரண் அமைக்கப்பட்டமை அதனால் அக்கிராம மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன் அவர்களின் எதிர்ப்புக்கு மத்தி யிலும் இராணுவம் காவலரணை அமைத்துள்ளமை என்பன போர் நிறுத்த மீறல் என்று விடுதலைப் புலிகளினால் சுட்டிக் காட்டப்பட் டுள்ளது

இச் சந்திப்பின் போது அரசியல் துறையினர் சார்பாக யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்

# விளையாட்டுப் போட்டி

(கோப்பாய்)

இருபாலை மாதர் சங்க முன்பள்ளி விளையாட்டு போட்டி நிகழ்வுகள வலி கிழக்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி திருமதி.அ.வெள்ளையங்கிரிநாதன் தலைமையில் .இன்று சனிக் கிழமை பி.ப.2.30 மணிக்கு சங்க முன்றலில் நடைபெறவுள்ளது. (உ-79)

# போதைப் பொருள் போட்டி ஒத்திவைப்பு

(திருகோணமலை)

வடக்கு கிழக்குக்கான கல்வி யமைச்சினால் நாளை ஞாயி ற்றுக்கிழமை நடத்தப் பட விருந்த போதைப் பொருள் ஒழிப்புக் கல்விப் போட்டிகள் பிற் போடப் பட்டுள்ளதை வடக்கு கிழக்கிற்கான உதவி கல்விப்பணிப்பாளர் என்.அனந்தராஜா தெரிவித்துள்ளார்

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த பேச்சு,நடனப் போட்டிகள் எதிர் வரும் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற விருப்பதாகவும்,விண்ணப்பங்கள் காலதாமதமாக கிடைத்தமையே இதற்கான காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

# மாகாண சபைகளின் அதிகாரம் உள்ளூராட்சி சபைகளுக்கும்

## அமைச்சர் அலுவிகார அறிவிப்பு

(கொழும்பு)

தற்போது நடைமுறையில் உள்ள மாகாண சபைகளுக்கான அதிகா ரங்களை மாற்றி அமைப்பதில் அரசு கவனம் செலுத்தி வருவதாக மாகா ணசபைகள் உள்ளூராட்சிமன்ற அலு

உள்ள அதிகாரங்களைப் பிரதேச சபைகளுக்கு வழங்குவது தொடர் பாகவும் அரசு நடவடிக்கை எடுத் துள்ளது. மாகாணசபைகளுக்கு வழங்கப்பட உள்ள நிதி பிரதேச சபைகளுக்கும் வழங்குவதற்கு

இ.த.விக்னராஜா அவர்கள்
(மாவட்ட நீதிபதி யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள்.
(கலைப்பீடாதிபதி யாழ்.பல்கலைக்கழகம்)

திரு.எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் அவர்கள்
(ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி)

செல்வி புஸ்பா செல்வநாயகம் அவர்கள்
(இளைப்பாறிய ஆசிரியை)

நாதஸ்வர வித்துவான்
கலாபு,ஷணம் என்.ஆர்.சுந்தரமூர்த்தி அவர்கள்.

சங்கீத பு,ஷணம்
திரு.S.கணபதிப்பிள்ளை அவர்கள்
(முன்னைநாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்–சங்கீதம்)

பேராசிரியர் A.சண்முகதாஸ் அவர்கள்
(தலைவர் – தமிழ்த்துறை
யாழ்.பல்கலைக்கழகம்)

திரு.து.வைத்தியலிங்கம் அவர்கள்
(சிரேஷ்ட உதவிச் செயலாளர்
இந்து கலாசார அமைச்சு)

கலாநிதி க.குணராஜா அவர்கள்
(மூத்த எழுத்தாளர்.)

சரவணபவன் ரவீந்திரா அவர்கள்
(முகாமையாளர் வர்த்தக வங்கி,
யாழ்ப்பாணம்)

கலாநிதி S.திருநாவுக்கரசு அவர்கள்
(விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியர்
பயிற்சிக் கலாசாலை)

வைத்திய நிபுணர்
தம்பிப்பிள்ளை பேரானந்தராஜா அவர்கள்

திரு செல்லப்பா நடராஜா அவர்கள்
(மூத்த பத்திரிகையாளரும் முன்னைநாள்
பாராளுமன்ற க்ண்சாட் அறிக்கையாளரும்)

திரு கந்தையா சோமசேகரம் (J.P)அவர்கள்

கவிதாஞ்சலி
மகாவித்துவான்
பிரம்மஸ்ரீ மா.தா.த.வீரமணி ஐயர்அவர்கள்

நன்றியுரை
திரு.S.இராமநாதன் அவர்கள்.
(நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன
மேலாளர்)

**அனைவரையும் அன்புடன்**
**அழைக்கின்றோம்**

நல்லை ஆதீனம் நல்லூர்.

மற்றும் வடமராட்சி கிழக்கு பொற்பதி கிராமத்தில் இராணுவத்தினரால் புதிதாக காவலரண் அமைக்கப்பட்டமை அதனால் அக்கிராம மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன் அவர்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் இராணுவம் காவலரணை அமைத்துள்ளமை என்பன போர் நிறுத்த மீறல் என்று விடுதலைப் புலிகளினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

இச் சந்திப்பின் போது அர்சியல் துறையினர் சார்பாக யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி,மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கயல்விழி ஆகியோரும் கண்காணிப்பு குழு சார்பில் யாழ்.மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுத் தலைவி கரினாவும் கலந்து கொண்டனர்

(இ-5)

---

## இடைக்கால....

வைக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு ஜனாதிபதி அனுப்பிய கடிதத்திலேயே மேற் கண்டவாறு கோரியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

விடுதலைப் புலிகளுக்கு அரசினால் அனுப்பி வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை தொடர்பான யோசனைகளை சமாதான நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட சில அமைச்சர்கள் மாத்திரம் அன்றி சகலரும் தெரிந்து கொள்ளக் கூடிய வகையில் அதனை அமைசசரவைக் கூட்டத்தில் அரசாங்கம் சமர்ப்பிக்க வேண்டும் என்று ஜனாதிபதி அக் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ள யோசனைகளுக்கும் எனக்கு அனுப்பி வைத்துள்ள யோசனைகளுக்கும் இடையே பாரிய வேறுபாடு இருப்பதனால் அதனை கட்சித் தலைவர்களுக்கும், பொது மக்களுக்கும் அனுப்பி வைக்கப் போவதாகவும் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ள வடக்குக் கிழக்கு இடைக்கால நிர்வாக யோசனைகளை எனக்கு அனுப்பி வைக்கும் பட்சத்தில் அது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் நான் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராகவுள்ளேன்.சமாதான நடவடிக்கைகளை சகலரும் தெரிந்து கொள்ள வேண்டும். இனப்பிரச்சினை தொடர்பாக இரகசியங்களைப் பேண முடியாதென்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# மாகாண சபைகளின் அதிகாரம் உள்ளூராட்சி சபைகளுக்கும்

## அமைச்சர் அலுவிகார அறிவிப்பு

(கொழும்பு)

தற்போது நடைமுறையில் உள்ள மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை மாற்றி அமைப்பதில் அரசு கவனம் செலுத்தி வருவதாக மாகாணசபைகள் உள்ளூராட்சிமன்ற அலுவல்கள் அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அமைசசர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது மாகாணசபைகளிடம் உள்ள அதிகாரங்களைப் பிரதேச சபைகளுக்கு வழங்குவது தொடர்பாகவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மாகாணசபைகளுக்கு வழங்கப்பட உள்ள நிதி பிரதேச சபைகளுக்கும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளது.

காலி மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளை நேற்று சந்தித்து உரையாடிய போதே அமைசசர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (வ)

# அமெ. விஸா பெறுவதில் புதிய நடைமுறை அமுல்

(கொழுமபு)

அமெரிக்காவுக்கான விஸா அனுமதிப்பத்திரங்களை வழங்கும் முறையில் புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

குடியேற்ற விஸாக்களைத் தவிர ஏனைய விஸாக்களைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிப்போர் புதிய நடைமுறைகளை அனுசரிக்க வேண்டும்.

இப்புதிய நடைமுறை நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்நடைமுறை அமுல்ப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களினால் எவரும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அமெரிக்கத்தூதரகம் தெரிவித்துள்ளது. (வ)

# வலி.கிழக்கு பிரதேசசபை,நீர்வேலி

## முக்கிய அறிவித்தல்

### முன்அனுமதி பெறாது மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி நடாத்துல்

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ''நீர்வேலி சவாரித் திடலில்'' எமது சபையின் முன் அனுமதி பெறாது மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிக்கான நுழைவுச் சீட்டுக்கள் வழங்கி அதன் மூலம் பெருமளவு வருமானம் பெற்று வருவதாக அவதானிக்கப்பட்டு வருகின்றது.

இச் செயலானது களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்திற்கு முரணான செயலாகும். ஆகவே இப் போட்டியை நடாத்துபவர்கள் உரிய முறையில் எமக்கு விண்ணப்பித்து முன் அனுமதி பெற்ற பின்னரே இப் போட்டியை நடாத்துவதற்கு ஏற்ற ஒழுங்கு செய்யப்பட வேண்டும் என்பதை சகலருக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

இச் செயலை மீறுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

**க.வெங்கடாசலம்**
**செயலாளர்**
வலி.கிழக்கு பிரதேச சபை,
நீர்வேலி,

வலி.கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி,
30.07.2003 (C/6446)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.08.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.